# இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்

(பிலிப்பி 2:11)



2021 வைகாசி மாதம் 22ஆம் திகதி

தூய ஆவியானவர் திருவருகை புபுது மங்கள யூபிலி மகோற்சவம்

# முன்னுரை

2021 தூய ஆவியானவர் திருவருகை புபுது பொன்விழா யூபிலி மங்கள மகோற்சவம் கொரோனா எனும் தொற்று நோயினால், எமக்கு நிகழ்த்திட வேண்டி இருப்பது, சுகாதார சட்டங்களுக்கு இணைந்த விதத்திலாகும். 2019 வருட பாஸ்கா தின குண்டுத் தாக்குதலினாலும், 2020 கொவிட் தொற்று நோயினாலும் இந்த வருடங்களில் சங்கமமாகவும், குடும்ப ரீதியிலும் தூய ஆவியானவர் பெருவிழாவினைக் கொண்டாடினோம். இந்த வருடமும் கொவிட் தொற்று நோய் தீவிரமாக எம் நாடுகளில் பரவிச் செல்வதனால், குடும்பமாகவும் தனியாகவும் தங்களின் இல்லங்களில் இருந்தவாறே யூபிலி மங்கள மகோற்சவத்தினை கொண்டாடிட நாங்கள் எமது தீர்மானத்தினை உங்கள் முன் வைக்கின்றோம்.

“ சிறிய நூாலை” உங்கள் கரங்களுக்கு அளிப்பது, Zoom தொலை நுட்பத்தின் ஊடாக அல்லது, DVD இறுவட்டு வழியாகவோ அல்லது You Tube வழியாகவே மங்கள மகோற்சவத்தில் பங்கு கொள்ள முடியாது போகின்றவர்களுக்கு ஆகும்.

எப்படியாயினும் எமது குறிக்கோள் ஐம்பது வருடம் பூராகவும் எம்மை அழைத்து வந்த மகத்துவமிகு இறைவனுக்கு நன்றி நவில்தலாகும். அவ்வாறே 2021 மே மாதம் 22 திகதி முதல் ஆரம்பிக்கப்படும் புதிய யுகத்தில் புதிய பெந்தகோஸ்தை வேண்டி மன்றாடுவோம். மங்கள விழாவின் போது தூய ஆவியின் மகிமையினை அனுபவிப்பதுடன் பரவும் கொடிய நோய்க்கு சக்தியுடன், தையரியத்துடன் முகங் கொடுப்போம். ஆதரவற்று நோயுற்று இருக்கும் நபர்களுடன் சங்கமமாகிடுவதற்கான வழியைத் தேர்ந்து கொள்வோம். முழு அகிலமும் எமது தேசமும், பரிசுத்த திரு அவை புபுதுவவிற்காகவும் செபத்தில் ஈடுபடுவோம்.

# பொது அறிவுரை

- வைகாசி 22ஆம் திகதி பி.ப 7.00 மணிமுதல் நடு இரவு வரை நாம் அனைவரும், முழு புபுதுவ மக்களும் ஒரே நேரத்தில் ஒன்றாகி சங்கமமாகுவோம். மங்கள மகோற்சவத்தினை எங்கள் இல்லங்களில் நடாத்துவதற்கு ஆயத்தமாவோம்.
- நாம் அனைவரும் எங்கள் இல்லங்களில் நாம் செபிக்கின்ற இடங்களில் வேதாகமம், பூ, விளக்கு அனைத்தையும் முன்பே ஆயத்தமாக்கி வைத்துக் கொள்ளவும்.
- குடும்பமாக வெள்ளை உடை அணிந்து செபத்துடனும் புகழ்ச்சியுடனும் மகத்துவமிகு இறைவன் முன்னிலையில் தோன்றி நின்று தூய ஆவியானவரின் திருமுழுக்கினைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்புடன் செபத்திற்குள்ளாகுவோம்.
- உங்கள் இல்லத்தில் நடைபெறுகின்ற தூய ஆவியானவர் மங்கள மகோற்சவம் குடும்பமாகவோ அன்றேல் நீங்கள் தனித்திருப்பின் நீங்கள் பெருவிழாவில் கலந்து கொள்ளும் விதத்தினைப் பற்றி முன்பே தீர்மானித்துக் கொள்ளவும்.
- நீங்கள் யூபிலி மங்கள மகோற்சவத்திற்கு பங்களிக்கும் விதமானது DVD இறுவட்டின் வழியாகவோ You Tube வழியாகவென்றால் புகழ்ச்சி, ஒளி வழிபாட்டின் பின்னர் கொடுக்கப்படும் வழிகாட்டுதலின் பின்னர் DVD இறுவட்டினை அல்லது You Tube அலை வரிசையை நிறுத்திவிட்டு குடும்பமாக புகழ்ச்சி, ஒளிவழிபாட்டிற்கு நீண்ட நேரம் செலவிட்டு பின்னர் மீண்டும் தொடர்ந்து வழிபாட்டில் கலந்து கொள்ளவும்.

- Zoom தொலைநுட்பம் வழியாக பங்கு கொள்வோர் புகழ்ச்சி, ஒளிவழிபாடு, திருப்பலி போன்றவற்றிகு நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.
- "சிறிய நூலை" மட்டும் பயன்படுத்தி மங்கள மகோற்சவத்தில் பங்கு கொள்ளுபவர்களாயின், நேர அட்டவணைக்கு அமைய குடும்ப அங்கத்தவர்களிடையே ஒவ்வொரு பகுதியையும் பகிர்ந்துக் கொண்டு வழிப்பாட்டில் ஈடுபடவும்.
- ஒளி வழிபாட்டிற்காக முன்னதாகவே மெழுகுவர்த்திகளை தயார் செய்துக் கொள்ளவும்.
- ஒளி வழிபாட்டின் ஆரம்பத்தில் முதலில் ஒளி ஏற்றுவதற்காக எண்ணெய் விளக்கு ஒன்றினை (பாஸ்கா மெழுகுவர்த்திக்காக) தயார் செய்து வைத்துக் கொள்ளவும்.
- இரவு 9.15 முதல் 9.45 வரை மதிப்பிற்குரிய எலெக்ஸ் நிலந்த அருட்தந்தையின் மறையுரையின் பின்னர் ( 30 நிமிடம்) ஓய்வு காலமாக செலவழிக்கலாம். அக்காலத்தினுள் DVD இறுவட்டு You Tube இசையினை நிறுத்திவிட்டு ஓய்வு காலத்தினை செலவழிக்கவும். ஆனால் Zoom ஒளிபரப்பு நேரலையாக இடம்பெறுவதால் குறித்த நேரத்திற்கு (இரவு 9.45) ஆரம்பிக்கப்படுவதால் அதற்காக இரவு 9.40 ற்கு தயார் நிலையில் இருக்கவும்.
- Zoom ஒளிபரப்பினுள் தொடர்பு கொள்வதற்கான Link கீழே தரப்பட்டுள்ளது. இவ் Link மங்கள மகோற்சவ தினத்திற்கு முதல் நாள் சங்க தந்தையர்களுக்கு Whatsapp மூலம் வழங்கப்படும்.

- Zoom தொலை நுட்பம் வழியாக தொடர்பு கொள்வதற்குச் செல்லும் (Link ) வழி முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

Topic:- கிது தன புபுதுவ தூய ஆவியானவர் புபுது யூபிலி மங்கள மகோற்சவம் -2021

Time:- May 22, 2021 - 07.00 PM

Sri Prasansaramaya, Walpola, Ragama, Sri Lanka.

Joint Zoom Meeting

https:/zoom.us/j/91414084251?
pwd=SWVWT3k0QVRCa
EhQM1c0ZkxtVstmQt09

Meeting ID: 914 1408 4251

Passcode: Kithu

# இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்

(பிலிப்பி 2:11)

**கிது தன புபுதுவ - பொன் விழா யூபிலி**

**தூய ஆவியானவர் திருவருகை மங்கள மகோற்சவம்**

**2021 வைகாசி மாதம் 22 சனி அன்று**

பி.ப 07.00 - 07.05 - பொன் விழா யூபிலி அறிமுகம்

பி.ப 07.05 - 07.12 - மேள வாத்தியம்

பி.ப 07.12 - 07.20 - அழைப்பு

பி.ப 07.20 - 07.25 - புகழ்ச்சிக்கான அறிமுகம்

பி.ப 07.25 - 07.30 - பரிசுத்த திரித்துவ நமஸ்காரம்

பி.ப 07.30 - 08.30 - புகழ்ச்சி

பி.ப 08.30 - 08.32 - ஆன்மீக வழிகாட்டி வண. றொபின்சன் விஜயசிங்க அடிகளாரன் உரைக்கான விளக்கம்

பி.ப 08.32 - 08.47 - ஆன்மீக வழிகாட்டி வண. றொபின்சன் விஜயசிங்க அடிகளாரன் உரை

பி.ப 08.47 - 08.50 - பரம நாட்டிய நடனத்திற்கு அறிமுகம்

பி.ப 08.50 - 08.58 - பரத நாட்டிய நடனம்

பி.ப 08.58 - 09.00 - வண. அலெக்ஸ் நிலந்த அடிகளாரின் உரைக்கான அறிமுகம்

பி.ப 09.00 - 09.15 - வண. அலெக்ஸ் நிலந்த அடிகளாரின் உரை

பி.ப 09.15 - 09.45 - வரை ஒய்வு காலம்

பி.ப 09.45 - 09.48 - சுவாமி அப்பாவைப் பற்றிய சிறு அறிமுகம்

பி.ப 09.48 - 10.00 - சுவாமி அப்பாவைப் பற்றிய சிறு அறிமுக நிகழ்ச்சி

பி.ப 10.00 - 10.02 - நடனத்திற்கான அறிமுகம்

பி.ப 10.02 - 10.10 - நடனம்

பி.ப 10.10 - 10.12 - தலைப்புரைக்கான விளக்கம்

பி.ப 10.12 - 11.12 - தலைப்புரை

பி.ப 11.12 - 11.22 - தலைப்புப் பாடல்

பி.ப 11.22 - 11.30 - பொன்விழா யூபிலி வருட சஞ்சரிகை வெளியீடு

பி.ப 11.30 - 11.35 - ஒளி வழிபாட்டைப் பற்றிய அறிமுகம்

பி.ப 11.35 - 01.00 - ஒளி வழிபாடு

மு.ப 01.00 - 02.15 - திருப்பலி

மு.ப 02.15 - 02.30 - புபுது பொதுக்கருத்துப் பாடல்

# அழைப்பு

## தூய ஆவியானவர் திருவருகைப் பெருவிழா
## புபுது யூபிலி மங்கள மகோற்சவம் - 2021

முழு அகிலத்தின் படைப்பாளரும் நிலைப்பானவரும்,
பரம அன்பின் அதி பரிசுத்த ஊற்றாகிய,
சர்வ வல்லப மகத்துவமிகு இறைவனிடமிருந்தும்,
அவருடைய பேரன்பின் விழிகளால் மனிதரை நோக்கி,
தம்முடைய மாபெரும் மாட்சிமையில் அவர்களையும் பங்காளர்களாக்கிட, இவ்வுலகிற்கு அனுப்பிய அவரது ஒரே பேறான மகனாகிய,
எமது மீட்பாளரும், நலனளிப்பவருமான இயேசு கிறிஸ்து ஆண்டவரிமிருந்தும்,
இம் மகா உன்னத தந்தை மகன் இணைப்பின் பரிபூரணமானவரும்,
உலகை தூய்மைப்படுத்தி அழைத்துச் செல்கின்ற
உன்னதமிகு பரிசுத்த ஆவியானவரிடமிருந்தும் அனுமதியை வேண்டி,
உன்னதமிகு திரித்துவத்தின் ஒரே இறைவனுக்கு
இரு கரம் கூப்பி நாம் நமஸ்காரம் செலுத்துவோம்

**நமஸ்காரமாகுக! நமஸ்காரமாகுக! நமஸ்காரமாகுக!**

கடந்து சென்ற வருடம் பூராகவும்,

**‘உத்தம மரியே!**
**உன்னத கடவுளின் வல்லமை உம் மேல் நிழலிடும்’**

எனும் தலைப்பினை முன்கொண்டு
தேவ மாதாவாகிய மரியன்னையை மூடிக்கொண்ட,
தூய ஆவியானவரின் மூடிக்கொள்ளுதலின் அனுபவத்திற்கு விழிப்புற்ற கிது தன புபுது மக்கள்,
ஐம்பது வருடம் பூராகத் தம்மை அழைத்து வந்த

அப்பா தந்தைக்கு தமது கௌரவமிகு மதிப்பினைச் செலுத்தி, வார்த்தையாலும். வாழ்வாலும் தமது புபுது வாழ்வினை புதுப்பித்தவாறு. ஆண்டவரின் நாமத்திற்கு சாட்சி அளித்திட ஆயத்தமாகி உள்ளார்கள்.
அதற்காக, புபுது வாழ்வின் ஆரம்பத்தில்,
ஆண்டவரின் ஆளுமையை ஏற்றவாறு கொடுத்த வாக்குறுதியை மீண்டும் உறுதிப் படுத்தி,
**“இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்”** எனும் தலைப்புடன் தமது யூபிலி வருடத்தினை ஆரம்பிப்பதற்கு,
ஆவியானவரின் வரத்தினை வேண்டி நிற்கின்றார்கள்.

ஆதலால்,

கிறிஸ்து வருடம் 2021ஆம் வைகாசி மாதம் 22ஆம் சனியாகிய இன்றைய தினத்தில், புதிய பெந்தகோஸ்தே
அனுபவத்தைப் பெற ஒன்று கூடி இருக்கும்,
மாண்பிற்குரிய குருக்களே! துறவறத்தாரே! பொது நிலையினரே!
கிது தன புபுதுவ மக்களே! நீங்கள் அனைவரும்
இயேசு கிறிஸ்து ஆண்டவரின் ஆளுமைக்கு
உங்களது வாழ்வை கையளித்து,
வருகை தந்துள்ள புதிய, தூய ஆவியானவரின் வருடம் பூராகவும்
அவருக்குள் உங்கள் வாழ்வைக் கையளித்து சாட்சி அளித்திட
இந்த பரிசுத்தமான இரவு ஆசீர்வாதம் ஆகட்டும் எனப் பிராத்தித்து
மதிப்புமிகு கௌரவத்துடன் தருகின்றோம்

அ....ழை...ப்பு....!!!

# புகழ்ச்சிக்கான அறிமுகம்

## "இயேசு கிறிஸ்து ஆண்டவர்"

கிறிஸ்துவிற்குள் அன்பிற்குரியவர்களே! இந்த இரவு எம் அனைவருக்கும் விசேசமிகு இரவாகும். ஏனென்றால், எமது பொன்விழா யூபிலி வருடமாகும். பெந்தகோஸ்து அனுபவத்திற்கு உட்புகும் இரவாகும். ஆதலால் அன்பிற்குரியவர்களே, இந்த இரவினில் நாம் ஆயத்தமாகுவோம். இந்த ஐம்பது வருட காலம் பூராகவும் எம்மை அழைத்து வந்த ஆண்டவருக்கு புபுது வாழ்வினை முன்கொண்டு, ஆவியானவரோடு சென்ற பயணத்தினை முன்கொண்டு, சர்வ வல்லவருக்கு நமஸ்காரத்தினைச் செலுத்துவதற்கும் அவரைப் போற்றிப் புகழ்ந்து பாடிடவும் ஆயத்தமாகுவோம்.

அன்பிற்குரியவர்களே! முழு புபுது பயணம் பூராகவும் நாம் எம் ஆண்டவரை வல்லமையோடு அனுபவித்தோம். எமது கண்களால் அவரைக் கண்டோம். எமது விசுவாசக் கண்களால் அவரைக் கண்டோம். ஆண்டவரின் வல்லமைமிகு செயற்பாடுகளின் வழியாக நாம் அவரை அனுபவித்தோம். அன்பிற்குரியவர்களே, எமது செவிப்புலன்களால் நாம் ஆண்டவரின் ஒலிக்கு செவிமடுத்தோம். நாங்கள் அவரது பரிசுத்தமான வார்த்தைகளுக்கு செவிமடுத்தோம். ஆண்டவர் வல்லமையோடு எம் வாழ்க்கை பூராகவும் எம்முடன் வீற்றிருந்து எமக்குப் பாதுகாவலைப் பராமரிப்பினை அளித்தார். ஆண்டவர் வல்லமைமிகு புயத்தினால் அவர் தம் மக்களை ஸ்பரிசித்து எமக்கு அவரது தூய ஆவியானவரது வல்லமையைப் பொழிந்து எம்மை அவர் புதுப்பொழிவு பெறச் செய்தார். அன்பிற்குரியவர்களே, எவ்விதமான எதிர்பார்ப்புக்களுமின்றி ஆண்டவருடைய

துணையாளரினால், அவர் நிரந்தரமும் முழு வாழ்க்கைப் பயணம் பூராகவும் எமது உள்ளத்தை நிரப்பினார். எதிர்பார்ப்பற்ற அன்பினால் ஆண்டவர் எமக்கு எல்லையற்ற விதத்தில் மக்களுக்கு எக்கணத்திலும் அன்பு செய்தார். எமது பாவத்தின் அடிமைத்தனத்தில் நின்று மீட்பைப் பெற்றுக் கொடுத்தார். அன்பிற்குரியவர்களே! எமக்கு புது வாழ்க்கை அமைப்பைத் தந்தார். எம் வாழ்விற்கு புதிய நோக்கினைத் தந்தார். எமக்கு இறை அரசைப் பற்றிய தரிசனமொன்றைத் தந்தார். எமக்கு ஆண்டவர் மேலொங்கிய விதத்தில் அன்பு செய்து எம்மோடு வாழ்ந்து, தமது இரக்கத்தினைக் கருணையை முழு மக்களுக்கும் ஐம்பது வருடம் பூராகவும் அனுபவித்திட வும் சுவைத்திடவும் வரம் பொழிந்தார்.

அன்பிற்குரியவர்களே! நாம் பெலவீனமுற்ற மக்கள். எனினும் இயேசு கிறிஸ்து ஆண்டவரின் ஆளுமையை முன்கொண்டு நாம் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வாழும் மக்கள். ஆண்டவரது ஆளுமையை முன்கொண்டு அவரது விருப்பத்தினையும், அவரது திருவுளத்தையும் தேடும் அதனை நிறைவேற்ற தாகம் கொள்ளும் மக்கள். ஆதலால் அன்பிற்குரியவர்களே! முழு வாழ்க்கை பூராகவும் சிலுவையடிவாரத்தில் தரித்து நின்று பேறுபெற்ற தாயாருடன் அந்த அனுபவத்திற்கு உள்ளாகிட எமக்கு ஆண்டவர் மாபெரும் வல்லமையைத் தந்தார்.

அன்பிற்குரியவர்களே! எமது வாழ்வினை உற்று நோக்கும் போது, நாம் மகத்துவம் நிறைந்த தேவனுக்கு இந்த பரிசுத்தமான இரவினில் கம்பீரமான கணத்தில் சர்வ வல்லவரைப் போற்றிப் புகழ வேண்டும். ஏனென்றால் கிறிஸ்துவின் பாஸ்கா மறைரகசியத்தில் பங்கு பெறுவதற்கு அவர் மாபெரும் வரப்பிரசாதத்தைத் தந்தார். ஆதலால் கிறிஸ்துவின் துன்புறும் பங்காளர்களாகுவதற்கு இயேசு

கிறிஸ்து ஆண்டவரின் மரணத்தின் பங்காளர்களாகுவதற்கு அவரது உயிர்ப்பின் வல்லமையை அனுபவிக்கும் பங்காளர்களாவதற்கு, ஆண்டவரோடு பயணிக்க முழு வாழ்க்கை பூராகவும் எமக்கு அவர் எமக்கு வரபிரசாதங்களை தந்தார்.

அவ்வாறே இயேசு ஆண்டவரின் இறை தன்மையினுள் அவரை நோக்கி அவருடன் பயணம் செய்ய பெரியதொரு வரப்பிரசாதத்தினை எமக்கு அருளினார். எனவே திரு அவையின் மறுமலர்ச்சி பெறும் செயற்பாட்டில் எம் மக்கள் ஈடுபட்டனர். சமூகத்திற்கு அன்பு செய்வதற்கு ஆண்டவர் எம்மை விழிப்புறச் செய்தார். ஆகவே பேறுபெற்ற தாயுடன் நாம் பயணித்த இந்த ஐம்பதாண்டு காலத்தினுள் மகத்துவமிகு ஆண்டவருக்கு முழு மனதுடனும், முழு ஆன்மாவுடனும், முழு இருதயத்துடன் நாம் அவரைப் போற்றிப் புகழ்வோம். ஆகவே அன்புக்குரியவர்களே, இவ் இரவில் எம் ஆண்டவரின் முன்னிலைக்கு சென்று நாம் செபிப்போம். எம் அனைத்து மக்களுக்காகவும், நாம் ஆண்டவரிடம் முழு இதயத்துடன் மன்றாடுவோம். மக்களினுள், மக்களுக்கிடையில் இருக்கின்ற உடைந்து, நொருங்கிய உள்ளத்தோருக்கு மன ஆறுதலை அளிக்குமாறு வேண்டி மன்றாடுவோம்.

ஆண்டவரிடம் வாழ்ந்தாலும் இறந்தோரைப் போல வாழுகின்றவர்களுக்கு இவ் இரவில் சக்தியினை வழங்கி புத்துணர்ச்சியை அளிக்குமாறு வேண்டி மன்றாடுவோம். உடைந்து நொறுங்கிய உள்ளங்களுக்கு புத்தெழுச்சியை அருளுமாறு ஆண்டவரிடம் மன்றாடுவோம். ஆகவே அன்புக்குரியவர்களே, ஒரே உள்ளத்தோடு ஆன்மாவோடும் ஒரே குடும்பமாக, ஒரே சங்கமாக புபுதுவ மக்களாக மகத்துவமிகு இறை தந்தைக்கு முழு உள்ளத்துடன் நமஸ்காரத்தினைச் செலுத்துவோம். அவருக்கு நன்றிப்

புகழ்ச்சியைச் செலுத்துவோம். ஏனெனில் கிறிஸ்வின் வழியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்காளாவோம். அப்படியாவது இறைவன் முன்கூட்டியே வைத்திருந்த திருத்திட்டத்தின்படி அனைத்தையும் நிகழ்த்துகின்றார். அவ்வாறாவது கிறிஸ்துவினுடாக முதலில் நம்பிக்கையை வைத்த நாம் அவரது மகிமைக்கு புகழ்பாடுவதற்காகும்.

## பரிசுத்த திரித்துவ நமஸ்காரம்

- சர்வலோக அதிபதியாயிருக்கின்ற பிதாவானவரே, நாங்கள் உம்மை நமஸ்கரிக்கின்றோம் நமஸ்காரம் ஆகுக! நமஸ்காரம் ஆகுக!
- சர்வலோக அதிபதியாயிருக்கின்ற பிதாவானவரே, நான் உம்மை நமஸ்கரிக்கின்றேன் நமஸ்காரம் ஆகுக! நமஸ்காரம் ஆகுக!
- சர்வலோக அதிபதியாயிருக்கின்ற மகனானவரே, நாங்கள் உம்மை நமஸ்கரிக்கின்றோம் நமஸ்காரம் ஆகுக! நமஸ்காரம் ஆகுக!
- சர்வலோக அதிபதியாயிருக்கின்ற மகனானவரே, நான் உம்மை நமஸ்கரிக்கின்றேன் நமஸ்காரம் ஆகுக! நமஸ்காரம் ஆகுக!
- சர்வலோக அதிபதியாயிருக்கின்ற தூய ஆவியானவரே, நாங்கள் உம்மை நமஸ்கரிக்கின்றோம் நமஸ்காரம் ஆகுக! நமஸ்காரம் ஆகுக!
- சர்வலோக அதிபதியாயிருக்கின்ற தூய ஆவியானவரே, நான் உம்மை நமஸ்கரிக்கின்றேன் நமஸ்காரம் ஆகுக! நமஸ்காரம் ஆகுக!

## புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்

# கிது தன புபுதுவவின் ஆன்மீக பணிப்பாளர் அருட்தந்தை ரொபின்சன் விஜேசிங்க அடிகளாரின் உரைக்கான அழைப்பு

50 வருடங்களாக நாம் வந்த பயணத்தில் எமக்கு ஆயனாக செயல்பட்டவர் எமது அன்பார்ந்த சுவாமி அப்பா ஆவார். தற்போது அவ் ஆயனாக செயல்படுபவர் கிது தன புபுதுவவின் ஆன்மீக பணிப்பாளராக கடைமையாற்றும் அருட்தந்தை ரொபின்சன் விஜேசிங்க அடிகளாரே, இறை ஆண்டவரை பற்றிய வார்த்தையை கிது தன புபுதுவ மக்களுடன் பகிர்ந்துகொள்வதற்கு கௌரவத்துடன் உங்களை அழைக்கின்றோம்.

## அருட்தந்தை ரொபின்சன் விஜேசிங்க அடிகளார்

எனது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, அன்பார்ந்த பிள்ளைகளே இளைஞர் யுவதிகளே,

அருட் தந்தை ரீட் செல்டன் அடிகளாரின் ஆன்மீக வழிகாட்டுதலுக்கு அமைய எனது அன்பார்ந்த அன்னையுடன் புபுதுவ வாழ்விற்கு உள்ளாகுவதற்கான பாக்கியத்தை 1975ம் ஆண்டு இவ்வாறான ஒரு மாதத்தில் பிலபிடிய என்ற இடத்தில் உள்ள புனித அன்னமாள் தேவாலயத்தில் அழைப்பு பெற்றேன். அப்போது எனக்கு வயது. 15 அதாவது இன்றைய நாள் ஆகும் போது 45வருடங்களின் புபுதுவ அனுபவத்துடன் இவ் வாழ்க்கை பயணத்தில் 50வது வருட பொன்விழாவை கொண்டாடும் இக்கணத்தில் இவ்வாறு எனது செபத்தை ஒன்று சேர்ப்பது மிகவும் ஆன்மீக மகிழ்ச்சியுடனாகும். லேவியர் 25:8-13 வசனம் வரை இறை மக்கள் யூபிலியை கொண்டாடுவதும்

அதன் அர்த்தமும், அதன் நோக்கத்தையும் எமக்கு கூறப்படுகின்றது. எனக்கு கிடைத்த வாழ்வின் புத்தெழுச்சிக்காக இவ்வாறான ஒரு நாளில் நான் அப்பா இறை தந்தைக்கு நன்றி புகழ்ச்சி கூறுகின்றேன். நான் அவ்வாறு செய்வது, எமது அன்பார்ந்த அருட்தந்தை சிறி ஒஸ்கா அபயரத்ன அடிகளார் என்ற கிது தன புபுதுவ வாழ்வின் பயணத்தின் ஆரம்ப கர்தாவாகிய அன்பார்ந்த சுவாமி அப்பா முன்கொண்டேயாகும். 1967ம் ஆண்டு அமெரிக்காவிற்கு சென்ற தூது பயணத்தின் வழியாக மறுமலர்ச்சியின் ஆன்மீக வாழ்க்கை வழி இலங்கை கத்தோலிக்க தாய் திருச்சபைக்கு 1971ம் ஆண்டு பரிசுத்த ஆவியானவரினால் தேர்ந்தெடுத்த சுவாமி அப்பாவின் வாழ்வினாலாகும். சுவாமி அப்பாவின் வாழ்வும் அதன் நிலைபாட்டின் வழியாக நாம் அறிந்து கொண்ட அவ்வாழ்க்கை முறை எமது தேசத்தின் பெறுமதிகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் முன்கொண்டு எமக்கு பெற்று தந்தைமைக்காக மகத்துவமிக்க இறைவனுக்கு நன்றி புகழ் கூறுகின்றேன்.

உலகத்தின் முதலும், விசேடமான பரிசுத்த ஆவியானவரின் இயக்கமானதும் எமது வாழ்க்கை பயணம் கத்தோலிக்க தாய்திருச்சபை என்பது நாம் அறிந்த விடயமாகும். அத் திருச்பையினுள் உருவாகின்ற ஒவ்வொரு வாழ்ககை முறையும், ஒவ்வொரு குழுவும் இயற்கையாகவே பரிசுத்த ஆவியானவருக்கு விழிப்புற்ற, அடிபணிந்த பரிசுத்த ஆவியானவரினுள் உருவாகிய குழுவாகும். மறுமலர்ச்சியின் வாழ்க்கை பயணத்திற்கு உள்ளாகிய மக்கள் பெறுகின்ற அனுபவம் அவ் ஒவ்வொரு குழுவிலும் விசேசமான இடத்தை வகிக்கின்றது என்பது தெளிவாகின்றது. ஏன் என்றால் நிரந்தரமும்

பரிசுத்த ஆவியானவருக்கு விழிப்புற்ற, விழிப்புறுகின்ற, அவரது விருப்பத்தை தேடுகின்ற, இறைவார்த்தை மீது கட்டியெழுபப்பட்ட வாழ்க்கை முறை என்றபடியினால் யூபிலி ஆண்டின் தலைப்பு “இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்” என்பதை அறிந்து கொள்வதற்கு, உணர்ந்து கொள்வதற்கு அவரை மாத்திரம் எமது வாழ்வின் ஆண்டவராக ஏற்றுக்கொள்வது அதனாலேயே, பாவத்தை அறிந்துக் கொண்டு பாவத்தை கைவிடுவதற்கு பரிசுத்த ஆவியானவருக்கு ஐவகை, ஏழுமுறை அதற்கு ஏற்ப நிரந்தரமும் விழிப்புறுவதற்கு இடமளிப்பதற்கு அன்பார்ந்த சுவாமி அப்பாவின் படிப்பினைகள் வழியாக போசணைபெறுகின்ற மக்களாவோம். அப் போசணை பெற்றுக் கொடுக்கின்ற அன்பின், ஒளியின் வார்த்தை வழிந்தோடி வருகின்றது என்பதை அனுபவிக்கின்ற கணமாகும். எனது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, அன்பார்ந்த பிள்ளைகளே, இளைஞர் யுவதிகளே, கொரோனா வைரஸ் காரணமாக பயத்தில் வாடிக்கொண்டு இருக்கின்ற, வலுக்குன்றி இருக்கின்ற சமுதாய சூழ்நிலையில் இன்று நாம் கொண்டாடுகின்ற 50 வருடங்களை திரும்பிபார்பதன் வழியாக இறைவனுக்கு நன்றி கூறி போற்றிப் புகழ்வோம்.

சுவாமி அப்பாவுடன் ஆரம்ப தொடக்கம் ஆன்மீக மறுமலர்ச்சியின் பயணத்திற்கு உள்ளாகிய , அப்பயணத்தில் வந்த, அப்பயணத்தில் வந்து இடையில் நின்ற அனைவரையும் முன்கொண்டு அப்பா இறை தந்தையை நோக்கி பார்க்கின்ற விசேடமான அனுபவத்தின் சந்தர்ப்பமாகும்.

வெறுமையாகியவாறு சிலுவையடிவாரத்தில் இருக்கின்ற தேவ தாயாரைப் போல் விழிப்புற்றவாறு

இயேசு கிறிஸ்துநாதரின் இறை புத்திரதன்மைக்கு எமது மனித புத்திரதன்மையினுள் அப்பா இறை தந்தையின் இறை இரகசியமான பரிசுத்த நிலைப்பாட்டினுள் தோன்றி நின்றவாறு வித்தியாசமான வாழ்வினூடாக உயிர்த்த இயேசு ஆண்டவருக்காக சாட்சி பகிர்வதற்கு பரிசுத்த ஆவியானவருக்கு மென் மேலும் விழிப்புறுவதற்கு அழைப்பு விடுக்கின்ற வருடத்தின் தொடக்கமாகும். கைவிடுதலினுடாக வெறுமையாகுவதற்கு, வெறுமையாகியவாறு தாகம் கொள்வதற்கு, தாகம் கொண்டவாறு பெற்றுக்கொள்வதற்கு, பெற்றுக் கொண்டவாறு உரிமையாக்கிக் கொள்வதற்கு உரிமையாக்கிக் கொண்டதை மனதில் பதித்தவாறு வளர்ச்சி அடைவதற்கு, வளர்ச்சி அடைந்தவாறு கனி கொடுப்பதற்கு செய்த வாழ்க்கை வழியை கொண்டாடுகின்ற 50வருடத்தின் ஆரம்பம் இன்றாகும்.

ஒரே ஒரு தாய் திருச்சபையின் பிள்ளைகள் என்ற வகையில் அக் கத்தோலிக்க திருச்சபையின் மையம் உயிர்த்த இயேசு கிறிஸ்து நாதர் என்பதை நாம் அறிந்த விடயமாகும். திருச்சபை ஆரம்பமாகுவது பரிசுத்த ஆவியானவரின் பொழிவினூடாக திருத்தூதுபணிகள் புத்தகத்தில் 2ம் அதிகாரத்தில் எமக்கு நிரந்தரமும் சொல்லி கொடுக்கின்ற நற்செய்தியாகும். தாய் திருச்சபை என்று கூறுவது இறை மக்களாவார்கள். இறை மக்கள் என்பதன் கருத்து பொதுநிலையினர், குருக்கள் துறவறவியகள் ஆவார்கள். குருக்களும், துறவிகளும் உருவாகுவது குடும்பங்களிலிருந்தே. அதாவது பொது நிலையினரிடமிருந்தே. ஆகையால் பொது நிலையினரும், குருக்களும் ஒரே உயர்வான நிலையை கருதுகின்ற திருமுழுக்கின் வழியாக ஆரம்பித்து மாறுப்பட்ட அழைப்புகளின் வழியாக ஒரே தாய் திருச்சபைக்கு

ஒரே இறை மக்களுக்கு பணிபுரிகின்ற மக்களாவோம். இறை வார்த்தையினால் போசணம் பெற்று பரிசுத்த திருச்சைபயில் சோர்ந்து போயிருக்கின்ற பகுதியினரை போசிக்கும் உயிர்த்த இயேசு ஆண்டவரை தமது வாழ்வின் ஒரே ஆண்டவராக ஏற்றுக்கொண்டு பெற்றுக் கொள்ளும் வாழ்க்கை மாற்றம், அம் மகிழ்ச்சியை அப் புதிய நிலையை உலகத்திற்கு சொல்லி கொடுக்கும் மக்கள் புபுது மக்களாவோம்.

இது உங்களதும் எனதும் அனுபவம் புபுது வாழ்வின் அனுபவமாகும். அனைத்தையும் கைவிட்டு விட்டு இறை விருப்பத்திற்கு இடமளித்தவாறு பார்த்துக்கொண்டு இருக்கவும், பார்த்துக் கொண்டு அடிபணிவதற்கும், அடிபணிந்து இருக்கின்ற இடத்திலிருந்து இருக்க வேண்டிய இடத்திற்கு செல்வதற்கும் ஆயத்தமாகின்ற 50வது யூபிலி ஆண்டில் சுவாமி அப்பாவின் அமைதியான வாழ்வின் செபத்தை நாம் பிராத்திப்போம். சுவாமி அப்பாவை என்னை விட அதிகமாக அறிகின்ற மக்கள் நீங்கள். அத் தந்தையின் சவால்மிகுந்த படிப்பினைகளுக்கு படிநிலைகளுக்கு நாம் இடமளிப்போம். அப்பாவின் அமைதியான நடுநிலைவகித்தலை பிராத்திப்போம். ஏன் என்றால் பயப்படுவதற்கு, கலங்குவதற்கு வீழ்ச்சிக்கு காரணம் இல்லை. ஏன் என்றால் இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்.

உங்கள் அனைவருக்கும் மிக்க மிக்க நன்றி !!

இயேசு துணை!

## வண. அலெக்ஸ் நிலந்த அடிகளாரை பிரசங்கத்திற்காக அழைத்தல்

கிது தன புபுது மக்களோடு நிரந்தரமும் இணைந்து இறை தந்தையின் விசேசமான உன்னத ஆத்மீக வெளிப்பாடுகளை எமக்கு வெளிப்படுத்துகின்ற சிலாப மறைமாவட்டத்தைச் சார்ந்த வண. அலெக்ஸ் அடிகளார் இந்த யுபிலி வருட மங்கள மகா இரவினில் விண்ணக ஆத்மீக வெளிப்பாடுகளை அறிந்து கொள்வதற்கு எமது புபுதுவ மக்கள் மாபெரும் ஆவலோடு காத்திருக்கின்றனர் அந்த விண்ணக ஆன்மீக வெளிப்பாடுகளை எம்முடன் பகிர்ந்து கொள்ள கொடுக்கும் கௌரவமான அழைப்பு இதுவே.

## வண. அலெக்ஸ் நிலந்த அடிகளாரின் உரை

### ஷாலொம் !

50 வருட கால புபுது பயணத்திற்காக ஆண்டவருக்கு நன்றிப் புகழ் பாடுகின்ற இந்த பாக்கியமான இரவினில் கிறிஸ்து எமது ஒரே ஆண்டவர் “கிறிஸ்துவே எமது வாழ்வின் ஆண்டவர்” என்ற தலைப்பு வசனத்தை அடிப்படையாகக் கொண்டு உங்களோடு நற்செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்காகக் கிடைத்த, இந்தக் கணத்திற்காக ஆண்டவருக்கு இதய பூர்வமாக நன்றி கூறுகின்றேன். நாம் இந்தத் தடவை இந்தத் தலைப்போடு தியானிப்பது வேறு தடவைகளை விட பயங்கரமான இருளான சூழலில் இருந்து கொண்டேயாம். ஒரு புறத்தில் முழு உலகத்தையுமே சுற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்ற இந்த கொள்ளை நோயும் மறுபுறத்தில் பீடனையும், கட்டுப்பாடுகளின் முன்னிலையில் கிறிஸ்தவ மக்களுக்கு அனுபவிக்க நேரிட்ட

இந்த துரதிஸ்டகரமான நிலையில் நீதியை வேண்டி கூக்குரலிடுகின்ற சூழலிலும், மற்றுமொரு புறத்தில் இந்த புண்ணிய மிகுந்த தாய் நாட்டின் இயற்கையின் எழிலை அழித்தவாறு நாற்புறமும் ஓடுகின்ற பயங்கரமான அலைகள் முன்னிலையிலும் ஆவியானவரின் பெருவிழா தலைப்பினைத் தியானிக்கின்றோம். ஆயினும் எமது ஒரே ஆண்டவர் இயேசு கிறிஸ்து நாதர் மாத்திரமே என்று நாம் விசுவசிக்கின்றோம். இந்த இருளான கணத்திலும் இந்தப் பயங்கரமான சூழலிலும் எமது ஆண்டவர் கிறிஸ்து நாதரே என்ற நற்செய்தியை இதயத்தில் தாங்கிக் கொண்டு ஐம்பது வருடங்களைக் கடந்து செல்லுகின்ற இந்தப் பயணத்தில் ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றோம்.

இந்தத் தலைப்பு பவுலடிகளார் பிலிப்பியரது சங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் 2:1-11 வரையில் உள்ள பகுதியில் எமக்குக் கிடைக்கின்றது. பிலிப்பிய சங்கத்தின் அனுபவம் என்ன? பிலிப்பியரது சங்கமானது உரோமப் பேரரசின் பிரதான நகர மக்கள் நற்செய்தியைக் கேட்டவுடன் ஆண்டவரை விசுவசித்த பவுலடிகளாரின் இதயத்தில் தங்கிய அன்பின் சங்கமாகும். பவுலடிகளாருக்கு நற்செய்தியின் மகிழ்ச்சிக்கு மாத்திரமல்ல, சபையை சங்கத்தை கட்டியெழுப்புவதற்கு பல வழிகளிலும் உதவிய விசேசமான சபை பிலிப்பியரது சங்கமெனக் கூறப்படுகின்றது. ஆயினும் அவர்களது அனுபவம் என்ன? சில வேதாகம அறிஞர்கள் சொல்லும் விதத்தில் கி.வ 62ஆம் ஆண்டின் போது புனித பவுல் இந்த நூலை எழுதியிருக்கலாம். அந்த அனுபவம் தான் உரோமப் பேரரசிலுள்ள நீரோ சக்கரவர்த்தியின் பீடனையின் முன்னிலையில், பலரது வாழ்க்கை கிறிஸ்து நற்செய்திக்காக தம் வாழ்க்கையை பலியாக்கிய கணத்தில் தான் பவுலடிகளார் ஆண்டவருள் தங்கியவாறு இந்த வார்த்தையை எழுதுகின்றார். பிலிப்பியரது சங்கத்திற்கு இந்த

வார்த்தையைப் பற்றி சபையினி அனுபவத்தை விபரிக்கின்ற இறையியலாளர்கள் கூறுவது, இது கிறிஸ்துநாதரை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட பாடலென்றும் மறுபுறத்தில், அங்குள்ள சபையை மையமாக்கிக் கொண்டு எழுதப்பட்ட அனுபவமெனவும் விளங்கிக் கொண்டால், இது உள்ளேயிருந்து வழிந்து வருகின்ற நீரோட்டமே தவிர வேறு எதுவுமில்லை. திருமுழுக்கு அழைப்பின் ஆழமெனவும் இறையியலாளர்கள் கூறுகின்றார்கள். திருமுழுக்கு எங்கு இருக்கின்றதோ அங்கு ஆவியானவரது திருப்பொழிவு இருக்கின்றது என்பது ஆரம்ப கிறிஸ்தவ சங்கத்தின் அனுபவமாகும். ஆகையால் பிலிப்பியரது சங்கத்திற்கு இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்ற வார்த்தையை நினைவூட்டி பவுலடிகளார் எதனைக் கூற விழைகின்றார்? உங்களையும், என்னையும் ஒரு மனப்படுத்துகின்ற தூய ஆவியானவர் உங்களோடும் என்னோடும் துணையாக வீற்றிருந்து இந்த அனுபவத்திற்கு உங்களையும் என்னையும் ஒன்று சேர்ப்பார் என்ற வேண்டுதலோடு தான் பவுலடிகளார் பிலிப்பியரது சங்கத்திற்கு இந்த வார்த்தையைக் ஞாபகப்படுத்தி, நீங்கள் திருமுழுக்குப் பெற்ற அழைப்பு கிறிஸ்து நாதரது நாமத்தினால் ஆகையால் இந்த தலைமைத்துவத்திற்கு நீங்கள் அடிபணிவது என்பது உங்களது விசுவாசத்தின் அனுபவம் மாத்திரமல்ல அது உங்களது முழு வாழ்வுமேயாகும்.

இன்று தொட்டு உங்களது வாழ்வின் சொந்தக்காரன் உரிமையாளன் உங்களது வாழ்வில் நிலைப்பைத் தீர்மானிப்பவர் இயேசு கிறிஸ்து நாதரே என்று மீண்டும் மீண்டும் பிலிப்பியரது சங்கத்திற்கு ஞாபகப்படுத்துகின்றார். உண்மையாகவே இது பயங்கரமான நற்செய்தியாகும். இது ஏன் பயங்கரமான வார்த்தை? கிறிஸ்து நாதரது தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளுதலின் பின் எனது உரிமை, எனது விருப்பம், நான் கட்டியெழுப்பும் வாழ்க்கைக்

கனவுகள் என்பன எனக்கு இல்லாது போகும். அதன் பின்னர் பயங்கரமான நிகழ்வு நிகழும். எனக்கு என்னையே சொந்தமில்லாது போகும். நான் எனக்கே இல்லாதளவுக்கு நான் நானில்லை என்ற அளவுக்கு நாம் எமக்கே இல்லையென்ற அளவுக்கு ஆண்டவருக்கு சொந்தமாவோம். அதற்கு பின்பு நாம் ஏற்படுத்திக் கொண்ட தலைமைத்துவத்திற்குள் தங்கியிருப்பதற்கான உரிமையில்லை. நாம் நபர்களுக்கு, குழுக்களுக்கு, குடும்பத்திற்கு இயக்கங்களுக்கு ஒப்படைத்த எமது வாழ்க்கை உரிமை. கிறிஸ்துமாத்திரமே ஆண்டவர் என்ற பயங்கரமான வார்த்தைக்குள் நாம் வாழும் போது எமக்கு என்று ஒன்றுமே எஞ்சியிராது. உண்மையாகவே பவுலடிகளார் கதைக்கின்ற இந்த அனுபவமானது ஆரம்ப சபைக்கு விந்தை மிகுந்ததொன்றாகாது. கி.பி 62 என்று கூறுவது சபை வாழ்வின் பொன்மயமான காலத்தைக் கடந்த யுகமாகும். பொன்மயமான காலமென்று கூறுவது ஏன்? முதல் மூன்று நூற்றாண்டுகள் கிறிஸ்து நாதரது தலைமைத்துவத்திற்கு அடிபணிந்த மக்கள் பல்லாயிரக்கணக்கானோர் இந்த வார்த்தையின் வல்லமையை அனுபவித்தவாறு முன் வந்தனர். ஆகையால் இது பயங்கரமான வார்த்தையாகும் அதற்கு மேலும் சாத்தானுக்கு தங்களது வாழ்க்கையைக் குறித்து தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான உரிமையில்லை. ஊனியல்பிற்கு அடிமைப்படுவதற்கான உரிமையில்லை. நாம் உலகைச் சார்ந்தவர்களில்லை. இதுதான் கிறிஸ்தவ சங்கத்தின் அனுபவமாகியது. ஆகையால் பவுலடிகளார் ஆண்டவர் கிறிஸ்து நாதர் மாத்திரமே என்று மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தியதால் புதியதொரு பலத்தைப் மக்கள் பெற்றனர். வலுவடைந்தோர் என்ன செய்தார்கள்? வாழ்க்கையைப் பற்றிப் பொருட்படுத்தாது முன்னேறிச் சென்று தம் வாழ்வைத் தியாகம் செய்தனர். வலுவற்றோர் வலுப்பெறுவதன் அனுபவத்திற்கு உள்ளாகினர். அதனைக் கண்டு பல்லாயிரக் கணக்கணக்கானோர் இயேசு கிறிஸ்து

நாதரின் தலைமைத்துவத்தை ஏற்பதற்காக முன்வந்தனர். அது உண்மையாகவே பவுலடிகளாரது போதனைச் சக்தியோ சபைத் தலைமைத்துவத்தின் நிர்வாக வல்லமையோ வாழ்ந்த மக்களின் தொகையில் வல்லமையோ அல்ல. ஆவியானவரே அவர்களை ஓரிடத்திற்கு சேர்த்து இந்த திருமுழுக்கின் அழைப்பிற்கு உட்புகுத்தினார். ஆகையால் இறையியலாளர்கள் கூறுகின்றார்கள் இதுவே கிறிஸ்துவை மையமாக்கிக் கொண்ட பாடலைப் போலவே, இது திருமுழுக்கின் அழைப்புப் பற்றி மென்மேலும் உறுதிப்படுத்திய கிறிஸ்து நாதரை ஆண்டவராக்கிக் கொண்ட மக்களது அனுபவத்தை ஆழத்தின் ஆழத்திற்கு எடுத்துச் செல்லும் பாடல் மாத்திரமாகாது. விசுவாசத்தின் வெளிப்பாடுமாகும்.

உண்மையாகவே இந்த பொன்விழாவைக் கொண்டாடுகின்ற கிதுதன புபுதுவவிற்கு மக்களுக்கு அன்று கி.பி 62ல் பிலிப்பியரது சங்கம் கடந்த வந்த பொன் மயமான அனுபவம் உலகத்தைச் சார்ந்த பொன்மயமான அனுபவமாகவில்லை. பல உயிர்கள் நிலத்திற்கு பசளையாகி, பலர் இரத்தம் சிந்தி, பலருக்கும் தங்களது உலக பெறுமதி மிகு உரிமைகள் இல்லாது போய், பிரஜா உரிமை கூட இல்லாது போய், கிறிஸ்து நாதரது தலைமைத்துவம் மாத்திரம் மிஞ்சுகின்ற வாழ்க்கையைப் பற்றி எதுவிதமான உரிமையும் இல்லாத அளவுக்கு அனைத்தினின்றும் வெறுமையாகும் அனுபவமாகியது.ஆயினும், அந்த பயங்கரமான அனுபவம் தான் சபை வாழ்வில் பொன்மயமான அனுபவம் என்று கூறுலாம் கிதுதன புபுதுவ மக்களாகிய எமக்கும் இந்த மணித்தியாலம் பயங்கரமான அனுபவம் என தோன்றுவதை நாம் உணருகின்றோம். ஆயினும் அன்பான அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகளே, மகனே, மகளே நாம் ஆண்டவரது பயங்கரமான அழைப்பின் முன்னிலையிலயே இந்த மணித்தியாலத்தைக் கடந்தவாறு இருகின்றோம்.

இது பொன்மயமான அனுபவமாகும். ஆகையால் இதனை இலகுவாகுவதற்கு இடமளிக்க வேண்டாம். இதுதான் சுவாமி அப்பா 50 வருடங்களாக எமக்குத் தந்த பொன்மயமான பெறுமதியே கிறிஸ்து நாதரை ஆண்டவராக்கிக் கொண்டு போகின்ற பயணத்தில் தலைமைத்துவத்தை கிறிஸ்து நாதருக்கு மாத்திரம் அளிப்பதற்கு எமக்குக் கற்பித்த சுவாமி அப்பாவின் உயிரூட்டும் வார்த்தையாகும்.

பாருங்கள், புபுது பயணத்திற்கு இந்த 50வருடங்களுள் எத்தனை பேர் தான் வாழ்க்கையை கொடுத்திருக்கிறார்கள். இன்று சாதாரண மக்கள் மாத்திரமல்ல பலவிதமான உயர்நிலை வகித்த தொழில் புரிவோர், கல்விமான்கள், அறிஞர்கள், இவர்களும் இயேசு கிறிஸ்து நாதரின் முன்னிலையில் அவை அனைத்தையும் குப்பைக் கூழங்கள் என்று ஒதுக்கித் தள்ளி வைத்து விட்டு வெண்ணாடை அணிந்தவர்களாக ஆண்டவருடன் கை கோர்த்த வண்ணம் பயணமாவதற்கான தீர்மானம் எடுத்தனர். அந்த உயிரூட்டம் எங்கிருந்து எமக்கு கிடைக்கப் பெற்றது. ஒருபோதும் சுவாமி அப்பா அது தனது நிர்மாணம் என்று கூறவில்லை.

பல சந்தர்ப்பங்களில் பலர் சுவாமி அப்பாவிடம் கேட்டிருக்கிறார்கள் புபுதுவை அவர் ஆரம்பித்தாரா? என்று புபுதுவ இயேசு கிறிஸ்து நாதரினால் அப்பா தந்தையினால் தூய ஆவியானவரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதென சுவாமி அப்பா எப்போதும் கூறுவார். அத்துடன் நான் செய்யவில்லை என்றும் கூறுவார். அவ்வாறு சுவாமி அப்பா ஏன் கூறுகின்றார்? இயேசு கிறிஸ்து நாதரை ஆண்டவராக்கிக் கொண்டு சுவாமி அப்பா சென்ற பயணத்தைப் பற்றிய உறுதிப்பாடு அவருக்கு இருந்தது. அவர் எந்தக் கணத்திலேனும் துறவறத்தினாலோ, துறவிகளால் நிர்மாணிக்கப்படுகின்ற பாதுகாப்பினில் தங்கி, பொது நிலையினர் தங்களிலும் குறைந்தவர்கள் என்று எண்ணுவதற்கோ அல்லாது போனால், இந்தப் பயணத்தில்

ஈடுபட்ட புதியவர்கள் பயிலுனர்கள் என்று கருதுவதற்கோ அப்படியும் அல்லாது போனால் ஆண், பெண், என்றோ சாதி, இன, மொழி பேதத்தோடு கருதாது இயேசுக்கிறிஸ்துநாதரை ஒரே ஆண்டவராக்கிக் கொள்வதற்கு அனைத்து மகன், மகள்மாரோடும் எல்லா தாய்மாரோடும் தகப்பன்மாரோடும் அனைத்து இளைஞர் யுவதிகளோடும் அனைத்து தொழில் புரிவோரும் ஒற்றுமைபடுவதற்கும் ஒருமனப்படுவதற்கும் சுவாமி அப்பாவுக்கு அந்த தலைமைத்துவம் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆகையால் சுவாமி அப்பா கட்டியெழுப்பிய மக்கள் பொன்மயமான யுகத்தில் பொன்விழாவைக் கொண்டிருக்கின்ற இந்த யுகத்தில் இலங்கை நாடெங்கும் உலகெங்கும் பல்வேறுவிதமான சங்கமங்களில் பொறுப்பேற்றவாறு பல துன்ப துரிதங்கள் மத்தியிலும் இந்தப் பயணத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். அது தான் தலைமைத்துவத்திற்கு அடிபணிகின்ற மக்களது அனுபவமாகும். அதுதான் பிலிப்பியரது சங்கத்தின் அனுபவம். அதுவே 312 வருடங்களாக கிறிஸ்தவ சங்கமானது அனுபவித்த நிலமையாகும். அது தான் பீடனை மிகுந்த அனுபவமாயினும் பொன்மயமான அனுபவமாகும். விண்ணகத்தில் பொன் எழுத்துக்களால் அவர்களது பெயர்கள் பொறிக்கப்பட்டன என்று சபை வாழ்வு எமக்குக் கற்பிக்கின்றது. மறைசாட்சிகளில் திருக்குருதியானது கிறிஸ்தவ விசுவாசத்திற்கும், புதிய சபைக்கும் கிடைத்த பரிசென கற்பிப்பது அதனாலாகும். அதே போலத்தான் இந்தக் கணத்தில் நான் கட்டாயம் கூற வேண்டிய விசேசமான காரணமொன்றுண்டு. இந்த பொன் விழா வருடத்திற்கு முன்னரும் ஏறக்குறைய எனது நான்கு வருட கல்வியின் போதும் நான் தேடிக்கொண்ட ஒரேயொரு காரணம் பலருக்குத் தவறி விடுமோ என்று நினைப்பதனாலேயே இந்த பொன்விழா வருடத்தில் கூற

வேண்டும். சுவாமி அப்பா ஒரு இறைவாக்கினர் மாத்திரமல்ல, உண்மையான உயிருள்ள புனிதருமாவார். சுவாமி அப்பா உயிர் வாழுகின்ற புனிதராவார். இந்த சபை வாழ்வை புத்தெழச் செய்தவர் மாத்திரமல்லாது, புத்தெழச் செய்கின்ற விதம் பற்றியாகும். இந்த முழு சபை வாழ்வையுமே செயல் முறைப்படுத்திய உயிர் வாழும் புனிதராவார்.

எளிமையான வாழ்க்கை ஊடாக வெறுமையாகுதலின் அனுபவத்தில் தங்கும் போது ஆவியானவரினால் நிரம்பும் போது தமக்கென்று எதனையுமே வைத்துக் கொள்ளாது அனைத்தையும் ஆண்டவரின் தலைமைத்துவத்திற்கு ஒப்படைத்து சுவாமி அப்பாவின் உயிருள்ள புனிதத் தன்மையை நாம் அனுபவிக்கின்றோம். சுவாமி அப்பா ஒருபோதும் தமக்கென்று மகிமையைத் தேடிக் கொள்வதற்கு முயன்றவரில்லை. அவரது துறவற வாழ்க்கையைப் பார்க்கும் போது, அன்று முதல் இன்று வரை அவர் வலுமிக்க புத்தெழுச்சியுள்ள திடமான உயிருள்ள சபையொன்றின் திடமிக்க பொது நிலையினரைக் கட்டியெழுப்பினார். அதற்கான நல்லதொரு சான்று தான் 1996ல் “கைவிடுங்கள்” என்று கூறியவாறு அனைத்துப் பொறுப்புக்களிலிருந்தும் வெறுமையாகியவாறு இந்த ஆவியானவரது இயக்கத்தை இந்த புத்தெழுச்சியின் இயக்கத்தை பொது நிலையினர் கரங்களில் ஒப்படைத்தார். அது கிறிஸ்துநாதரின் தலைமைத்துவத்தைப் பற்றி உயிருள்ள புனிதராக சுவாமி அப்பா வைத்த விசுவாசமாகும். புனிதரொருவரால் மாத்திரமே அதனைச் செய்வதற்கு முடியுமாகும். இயேசு கிறிஸ்து நாதரின் தலைமைத்துவத்தின் முன்னிலையில் ஒருவரை விசுவசிப்பதற்கு ஆழமாக நம்புவதற்கு வல்லமை கிடைக்கப் பெறுவது, புனிதரொருவருக்குக் கிடைக்கும் வல்லமையாகும். அந்தப் புனிதத் தன்மையை சுவாமி அப்பாவின் வாழ்க்கையில் கண்டமையால் தான் அந்த

புனிதத் தன்மையை சுவாமி அப்பா பொதுநிலையினரின் கரங்களுக்கு இந்த விசேசமான புத்தெழுச்சியின் இயக்கத்தை ஒப்படைத்தார். இன்றைய நாளாகும் போது இலங்கை நாட்டிற்குள்ளும் அகிலம் முழுவதிலும் மூலை முடுக்கெங்கும் இந்த மறுமலர்ச்சியின் அனுபவத்தை எடுத்துச் சென்ற பல பொது நிலையினருக்கு சுவாமி அப்பாவின் இந்த மெருகானது புனிதமான மெருகானது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனின்று விலகிச் சென்றோர் கூட இன்று சுவாமி அப்பாவின் புனிதத்தன்மையைப் பற்றி "இறைவாக்கின் குரல்" மென்மேலும் கூறுகின்றது. அதனை மக்கள் உறுதிப்படுத்துகின்றனர். சபைக்குக் கிடைக்க வேண்டிய கணத்தில் தான் சுவாமி அப்பாவுக்கு இந்த மெருகு கிடைக்கப் பெற்றதென்பதை உணர்கின்றேன். ஏன் சரியாக 50 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு மாத்திரமல்ல, முழு உலகிற்குமே தாக்கத்தையேற்படுத்துகின்ற விசேசமான தீர்மானமொன்று சபை வாழ்வில் எடுக்கப்பட்டது.

சபையின் கதவுகளைத் திறந்து விட்டவாறு ஆவியானவரது காற்றினை சபைக்குள் வருவதற்கு இடமளித்த 23வது அருளப்பர் திருத்தந்தை அந்த அழைப்பினை விடுக்கும் போது சபை நடுநடுங்கியது. சபையால் இதனை தாங்கிக் கொள்வதற்கு முடியாது போயிற்று. பலர் துறவறத்தை விட்டு விலகிச் சென்றனர். ஆயினும் வயோதிபராக இருந்த திருந்தந்தை ஆவியானவருக்கு உளந்திறந்தவாறு அந்த மெருகினுள் சபைக்கு தலைமைத்துவத்தைக் கொடுத்தார். ஆயினும் இலங்கைக்கு இதனை எடுத்து வருவதற்கான முதலிடத்தை யார் கொடுப்பார்கள் என்ற நிலையிலிருக்கும் கணத்தில் ஆவியானவர் எமது சுவாமி அப்பாவை இரண்டாவது வத்திக்கான் சங்கம் கண்ட கனவை இலங்கை மண்ணில் நனவாக்குவதற்கு அழைத்துக் கொண்டது. ஆகையால் சபையென்பது கிறிஸ்துநாதரே. திருவருட்சாதனமென

இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் "லூமென் ஜென்சி"யும் என்ற நிரூபம் வெளிப்பாடாக்கும் போது சபையென்பது இயேசு கிறிஸ்து நாதராலேயே அப்போஸ்தலர்கள் மீது கட்டியெழுப்பப்பட்ட அகிலத்தின் சபையாகும். அந்த கிறிஸ்துவை மையமாக்கிக் கொண்ட செயற்பாடுடனான வெளிப்பாடானது கிதுதன புபுதுவ வழியாக இன்றாகும் போது அகிலத்திற்குமே வெளிப்பாடாக்கப்பட்டுள்ளது என்று நான் அச்சமின்றிக் கூறுகின்றேன், இந்தக் கணத்தில் நான் இதனை உணர்ச்சி வசப்பட்டுக் கூறவில்லை. எனது 5 வருட கால இறையியல் தேடலுக்கமைய நான் அறிவேன். இரண்டாவது வத்திக்கான் சங்கத்திற்கு இருந்த உண்மையான கனவை கிறிஸ்துவை மையமாக்கிக் கொண்ட ஆவியானவரினால் ஊட்டம் பெறுகின்ற சபை வாழ்வும் அருட்சாதன வாழ்வும் ஒன்றிணைந்த நம்பிக்கை மிக்க சபை வெளிப்பாடு, அகிலம் பூராகவும் 23வது அருளப்பர் திருத்தந்தை கண்ட கனவை இலங்கை மண்ணில் ஆரம்பிப்பதற்கு ஆவியானவர் எமது சுவாமி அப்பாவைத் தேர்ந்து கொண்டு விட்டார்.

அது இப்போதே மண்ணில் உயிர் பெற்றுள்ளது. ஆகையால் தானே இந்த கணத்திலும் துன்ப துரிதங்கள், பயமுறுத்தல்கள், பீடனைகள், வேதனை, கண்ணீர் மத்தியிலும் கிறிஸ்துநாதரது தலைமைத்துவத்தைக் கைநெகிழாது இயேசு கிறிஸ்து நாதர் ஒரே ஆண்டவர் என்ற அந்த விசுவாசம் அன்று பிலிப்பியரது சங்கம் 62வது ஆண்டில் தடைகள், பயமுறுத்தல்கள் மத்தியிலும் பொன்மயமான காலத்தைக் கடந்தவாறு நின்ற அனுபவத்தைப் போலவே இன்றும் எமது புபுது மக்களுக்கு நிற்கக் கிடைத்திருப்பது அதனால் ஆகும். நான் இந்தக் கணத்தில் வெளிப்பாக்குகின்றேன். இரண்டாவது வத்திக்கான் சங்கத்தைப் பற்றி கைநூலானது வைத்திராத காலத்தில் குறைந்த பட்சம் சபையானது நிருபங்களை மக்கள் வசப்படுத்திக் கொடுக்காத

காலத்திலும், சுவாமி அப்பா இதனுள் இருந்த சுருக்கத்தை வெறும் இறையியல் சிந்தனையாக அல்ல, உண்மையான ஆழ் தியான செப வாழ்வு வாழ்ந்த புனிதராக, அச்சமின்றி இறைஅரசிற்காக தோன்றி நின்ற இறைவாக்கினராகி இந்த நோக்கை தரிசனத்தை பொது நிலையினருக்கு ஊட்டினார். ஆகையால் இன்றைய நாளாகும் போது எம்மால் சந்தோசப்பட முடியும். உண்மையான பொது நிலையினரது பொறுப்பின் செயற்பாட்டினை இலங்கை மண்ணில் நன்றாக வெளிப்படுத்தும் சபை புபுதுவ ஆகும். உண்மையாகவே, எமது வாழ்க்கையினால் அது வெளிப்பாடாக வேண்டும் என்று நம்புகின்றேன். இறுதியாக யுகம் யுகமாக ஓடிச் செல்ல வேண்டிய புபுது பயணம் பற்றிய எனது கனவை வெளிப்படுத்த விரும்புகிறேன். புபுதுவிற்கு அத்தியாவசியமாக இருக்க வேண்டியவர்கள் யார்? புபுதுவிற்கு இருக்க வேண்டியது உண்மையாகவே தூய ஆவியானவரினால் நிரம்பிப் பயணிக்கின்ற பொது நிலையினர் ஆவர். அவர்கள் கிறிஸ்துவைப் பின் செல்வோர் ஆகுமளவிற்குத் தான் கிறிஸ்துநாதரது தலைமைத்துவத்திற்குள் மூழ்குகின்ற அளவுக்குத் தான் அந்த புபுது பயணம் முன்னேறிச் செல்லும். ஆகையால் 1996ல் பொது நிலையினரது கரங்களில் சுவாமி அப்பா வைத்த இந்த ஆவியானவரது இயக்கம் மறுமலர்ச்சியடைந்த பொது நிலையினரது கைகளினால் இன்றும் பல யுகங்களுக்குப் பரிசாக கொடுத்தவாறு வருங்கால பரம்பரையினருக்கு பயணமாவதற்கான வல்லமை, சக்தி திடம் என்பன ஆவியானவரினால் பொழியப்படட்டும் என 50 வருட ஜுபிலியைக் கொண்டாடுகின்ற இந்தக் கணத்தில் பிரார்த்தின்றேன்.

இயேசு துணை

# 1. சுவாமி அப்பாவின் அறிக்கையைப் பற்றிய சிறிய அறிமுகம்

கிது தன புபுதுவிற்கு யூபிலி வருடம் இவ்வாறு முக்கியத்துவம் பெறுவது ஏன்? இதை காம்பீரமாக புபுது மக்கள் கொண்டாடுவது ஏன்?

அது வேறெதனாலும் அல்ல. இரண்டாம் வத்திக்கான் மந்திர சபை வழியாக அப்போதைய திருச்சபைத் தலைவர்களினால் தூய ஆவியானவரினால் கேட்கப்படுகின்ற வேண்டுதலினால், அன்று தூய ஆவியானவரின் வெளிப்பாடு திருச்சபைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட தூதுரைப்பணியின் கடமையை இந்த இலங்கையினுள் முதலாவதாக நிறைவேற்றுவது அங்கே ம்ன்னோடியாகச் சென்ற கிது தன புபுதுவவினால் ஆகும். அன்றைக்கும் இன்றைக்கும் இடையில் 50 வருடக்கால பயண அபிமானத்தின் முன்னிலையில் இந்த புகழ்ச்சியின் இரவிற்கு உட்புகுந்துள்ளோம்.

அதனால் இந்தப் பயணத்தில் எமக்கு மறக்க முடியாது எம் முன்னோடியானவரை, ஆண்டவர் அவரை ஊடகமாக்கிக் கொண்ட இறைவாக்கினர் அவர் வேறு எவரும் அல்ல, அருட்திரு. ஒஸ்கா அபயரத்ன அடிகளார் ஆவார். சந்தேகமின்றி ஆண்டவர் வரவிருக்கின்ற காலத்தில் நடக்கவிருப்பதனை அவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். அதனால் தான் ஆண்டவர், உண்மையான இறைவாக்கினராகின்றார். இந்த பயணத்தில் இந்த இறைவாக்கினரின் உயிரூட்டத்தைப் பெற்று வந்த 50 வருட வழியின் நினைவு எமக்கு இந்த அளவிற்கு மெருகூட்டி சிறப்புறச் செய்வது இதனாலாகும்.

உண்மையாகவே இந்த புண்ணிய பூமியிலும் தூய ஆவியானவரின் பெருவிழா இரவின் போது ஶ்ரீ பிரசங்சாராமயவினுள்ளும் ஆண்டவர் எம்மோடு வீற்றிருக்கின்றார். அவர் அனைத்தையும் காண்கின்றார். ஆனால் எதையும் காணாதவர் போல் இருக்கிறார். அவர் அனைத்தையும் செவிமடுக்கின்றார். ஆயினும் எதையும் கேட்காதவர் போல் இருக்கின்றார். இதுவே இவ்வுலக இறைவாக்கினராக இருக்கின்ற அனுபவமாகும். எனவே மிகுதியான நேரங்களை நாம் ஒதுக்குவது அப்பா தந்தையானவருக்கு சுவாமி அப்பா ஊடாக இந்நாட்டில் நடைமுறைப் படுத்திய மாபெரும் புரட்சியினாலாகும். இந்த உலுவப்படங்கள் வழியாக இந்த இறைவாக்கினரை நீங்களும் நானும் காணப் போகின்றோம். அதுவே எதிர்கால வாக்கை அறிவிக்கும் முன்னோடியானவரைக் காணப் போகின்றோம். அதுமாத்திரமல்ல, உண்மையாகவே எதிர்கால புனிதருடன் நாம் பயணித்த வண்ணம் இருக்கின்றோம். இந்தக் கணம் இவ்வுருவ படங்களைக் காண்பதற்காகும்.

## சுவாமி அப்பாவைப் பற்றிய சிறு அறிக்கை

அருட்தந்தை சிறி ஒஸ்கா அபயரத்ன அடிகளார் எமது அன்பார்ந்த சுவாமி அப்பா தமது தூதுரைப் பணியை ஆரம்பித்தவாறு 1957 மாசி மாதம் 2ம் திகதி குருத்துவம் பெற்றார். தமது குருத்தவ வாழ்வின் ஆரம்பம் தொடக்கம் ஏழை எளியவன், ஒதுக்கப்பட்டவன், பீடனைக்கு உள்ளாகியவர், இளைஞர், தொழிலாளி போன்றவாகளுக்காக தோன்றி நிற்பது அவரது இயல்பாக காணப்பட்டது. ஊழல், லஞ்சம், அநீதிக்கு எதிராக யதார்தமாக கதைக்கின்ற, சத்தியத்திற்கு சாட்சி பகிரும் ஒருவராக இயேசு கிறிஸ்துநாதரைப் பற்றி அவரது

தரிசனம் புரட்சிகரமாக மேல் ஓங்கியது. அதுவரை இருந்த பக்தி முறைகளை தகர்த்து எரிந்தவரானார்.

1971ம் ஆண்டில் உயிர்த்த ஆண்டவரிடமிருந்து பெற்ற ஸ்பரிசத்துடன் பரிசுத்த ஆவியானவரின் மறுமலர்ச்சியின் அனுபவம் அவரது வாழ்க்கை பயணத்தின் திருப்பு முனையாக திடசங்கற்பம் ஆகியது. அவ்வறான விலைமதிக்க முடியாத அனுபவங்களை தம்முடன் இருந்த இளைஞர் இளம்பெண்களுடன் பகிர்ந்து கொண்டவாறு செபத்தின் புகழ்ச்சியின் பயணத்திற்கு தந்தையானவர் உள்ளாகினார். அன்று சாதாரணமான கத்தோலிக்க பொது நிலையினருக்கு பொருந்தாது என்று கனிக்கப்பட்டு இருந்த பரிசுத்த வேதாகமத்தை இளைஞரின் கரங்களுக்கு கையளித்தவாறு, இறை வார்த்தைனுள் இறை வாக்குறுதிகளை உரிமையாக்கியவாறு இறை விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு எமது குருவானவரை சுற்றி இளைஞர் இளம்பெண்கள் ஒன்று கூடினார்கள். இவை அவருக்கு சொந்தமாகி இருந்த பேச்சு திறனைவிட அவ்வார்த்தைகள் வழியாக இளம் ஆத்துமத்திற்கு அழைத்த பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மிகுந்த புத்தெழுச்சியானால் ஆகும்.

அக்காலத்தில் அடிப்படைக் கோட்பாட்டாளரகளினால் உருத்திரிபு பயன்படுத்தலானதாக இருந்த பரிசுத்த வேதாகமத்தின் உண்மையான இறை வெளிபாடுகளை தேடிச் சென்றவாறு பரிசுத்த திருச்சபையின் உயிருள்ள சம்பிரதாயங்களுக்கு அமைய அதன் ஜீவனுள்ள சுவையை மனித உள்ளங்களுக்கு வழிந்தோட செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரே அக்கணம் தொடக்கம் அவரை வழிநடத்தியது திருச்சபையை பாதுகாக்கும் பரிசுத்த ஆவியானவரின் கோட்டையின் அடித்தளம் இட்டவாராகும். மேலும் ஞானத்தை வேண்டி செய்யும் வேண்டுதலில்

அல்லது திருவழிபாட்டு நாட்காட்டி பெந்தகொஸ்து நாளுக்கு மாத்திரம் கட்டுபட்டு இருந்த ஆவியானவருடன் முழு வாழ்வையுமே இணைத்து பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலுக்கு, நிரந்தரமும் பரிசுத்த ஆவியானவருக்கு விழிப்புறுவதற்கு மறுமலர்ச்சி அடைந்த கிறிஸ்தவ மக்களுக்கு வழியை அமைத்து கொடுத்து முன்னோடியாக செயல்பட்டவர் எமது அன்பார்ந்த சுவாமி அப்பா ஆவார்.

அவரது நடை, உடை, பாவனை அனைத்தும் இலங்கை கலாச்சாரத்திற்கு அமைய ஆன்மீக தொகுதிக் கூற்றுடன் இணைந்து பௌத்தம், இந்து, இஸ்லாம் போன்ற இந்நாட்டின் முக்கியமான மதங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியவாறு, அந்த அனைத்து மதங்களினதும் ஆன்மீகத்தை ஸ்பரிசித்த அவர் சகல மதமும் ஒன்று என்ற எளிதான கூற்றுகளினின்று விடுபட்டு அவ்வனைத்து மதங்களினதும் தனித்துவமான தார்மீக ஆழத்திற்கு மறுமலர்ச்சி அடைந்த மக்களை நெருங்க செய்தார்.

திருச்சபையின் படிப்பினைகளுக்கு அமைய சுவாமி அப்பாவினால் முன்வைத்த வெளிப்பாடுகள் எல்லா நேரமும் எல்லோருக்கும் மிகவும் விரும்பதக்கதாக இருக்கவில்லை. இறை வெளிப்பாடுகளை பகிர்ந்து கொள்ளும் போது சிலநேரம் மேலானதாகவும் கரடுமுரடாகவும் அமைந்தது. ஒரு நேரத்தில் சாதாரண மக்களுக்கும், திருச்சபையின் தலைவர்கள் சிலருடைய கிறிஸ்தவ நோக்கத்திற்கும் மனப்பான்மைக்கும் முரண்பாடாக அமைந்தது.

ஆனாலும், பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடுகளின் முன்னிலையில் அமைதியாக இருப்பதற்கோ அல்லது மற்றவர்களை சந்தோசபடுத்துவதற்கோ பட்சமுள்ள தன்மையை பெற்றுக் கொள்வதற்கோ உள்ளாகி இறை வெளிப்பாடுகளை குழப்பிக் கொள்ளவில்லை. தேவ அன்னையும் இயேசு கிறிஸ்து நாதரைப் பற்றியும்

ஆழமான இறையியல் வெளிப்பாடுகள் அவர் வழியாக இலங்கை தாய் திருச்சபைக்கு பரிசாக அளிப்பதற்கு காரணம் அவர் பரிசுத்த ஆவியானவருக்கு எல்லையற்ற விதத்தில் உளம்திறந்தமை புதையலை போன்றதாகும்.

ஆதலால் தேவதாயை பற்றி காண்பிக்கப்படும், பூக்களைப் போல வர்ணிக்கும் பக்தி முயற்சிகளை மேலோங்கி செல்கின்ற, அன்னையினது உள்ளத்தை தெளிவாகக் கண்டு இறைதிருவுளத்தினைப் நிறைவேற்றும் மக்களை அமைப்பதற்கு அப்பா தந்தையாம் இறைவன் சுவாமி அப்பாவை கருவியாக்கிக் கொண்டார்.

எங்களது அன்பிற்குரிய சுவாமி அப்பாவின் வாழ்க்கையில் குருத்துவ வாழ்வானது, அவரது தரிசனம் சாதாரண ஆன்மீக கட்டமைப்புக்கு மாத்திரம் கட்டுபடவில்லை. உயிர்த்த கிறிஸ்து ஆண்டவரை தமது வாழ்வின் ஒரே ஆண்டவராக ஏற்றுக் கொண்டதின் பலனாக அவர், கிறிஸ்து ஆண்டவரின் உள்ளாந்தரத்திற்கு எந்நேரமும் பயணம் செய்தார். ஆதலால் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார சூழலுக்கு கிறிஸ்தவ கண்ணோட்டத்துடன் செயல்படுவதற்கு அவர் பின் வாங்கவில்லை.

இரணவில அமெரிக்கன் ஒலி, எப்பாவெல பஸ்பேட் வைப்பு, நொரிச்சோலை நிலக்கரி வெப்ப மின் நிலையம் போன்ற தேசிய அபிவிருந்தி திட்டங்களுக்கு மறைவிடமாக்கி நிகழவிருந்த சூழலின் அழிவுமிகு செயற்பாட்டிற்கு விரோதமாகி செயற்பட முன் வந்ததும் கிறிஸ்துவின் அனுபவத்தினாலாகும்.

மேலும் பல தசாப்தங்கள் மேலோங்கிய எதிர்காலத்திற்காக நிகழ்கால மறுமலர்ச்சி பெற்ற மக்களை ஆயத்தப்படுத்தி விசேடமான தலைமைத்துவம் அவருக்கு உரிமையாகி இருந்தது. தொழில்நுட்ப

முரண்பாடுகள், சுற்றுச்சூழல் மாற்றங்கள், அரசியல் எழுச்சிகள் முன்னிலையில் தவறான கருத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது நிலையினரை அறிய செய்து ஊர்வலம் செல்லவோ அவர் பின் வாங்கவில்லை. எதைப்பற்றியும் கதைப்பதோடு மாத்திரம் நின்றுவிடாமல் செயலில் ஈடுபட முன் வந்தது, தூயஆவியானவரது அசைவின் இசைக்கும் இணைவிற்கும் விழிப்புற்று இருந்தமையினாலாகும்.

ஜனநாயகம், சோசலிசம், தாராளமயம் போன்ற வாதங்களுடன் அல்லது தனிப்பட்ட மனிதர்களது கருத்து வேறுபாடுகளுக்கு சிக்குண்டுபோகாமல் மதங்களுக்கு முன்னுரிமை அளித்து ஒரே நாட்டினுல் எளியவர்களை உயர்த்திடும் செயலமைப்பைப் பற்றி சுவாமி அப்பா தமது எழுத்தாணி மூலமாக தேசிய ஊடகங்களினூ டாக மக்களை விழிப்புற செய்தார். அதற்கு புதிய அரசியல் சிந்தனைக் கதிர்களை பின்னர் “இறைவாக்கு எதிரொலி” எனும் பெயரில் எதிரொலித்த வண்ணம் உள்ளது. எளியவர்களை மென்மேலும் எளியவர்களாக்கும் பொருளாதார அபிவிருத்தி பயனற்றது என்பதைக் கண்ட சுவாமி அப்பா, கதைப்பவராக மட்டும் இராது அதற்கு உயிரளிக்கும் வாழ்க்கை சாட்சியத்தின் வழி உண்மையான எளிமைமிகு வாழ்வில் சுதந்திரமான விடுதலையின் ஆனந்தத்திற்கு வழிகாட்டுகின்ற கண்ணாடியாக விளங்கினார்.

இதன் வழியாக தூய ஆவியானவர் சுவாமி அப்பாவின் வழியாக மறுமலர்ச்சி பெற செய்தது. இலங்கை திருஅவையை மட்டுமல்ல, முழு தேசத்தின் அனைத்து பகுதிக்கும், கட்சிகளுக்கும் ஆவியானவரது ஒளிப்பிரகாசம் சுடர் விடச் செய்தார்.

ஓர் கணத்தில் அவர் முன்வைத்த ஆழமான ஆன்மீக

வழிகாட்டுதல்கள் புபுதுவ மக்களுக்கு கூட புரிந்து கொள்ள முடியாது போயிருந்தது என்பதையும் உறுதியாகக் கூறலாம். அந்த அளவிற்கு இவ்வெளிப்பாட்டிகளினுள் இருந்த பரிசுத்த தன்மையின் விண்ணக இசையின் அசைவின் நிலையை தெளிவுபடுத்த முடியாது அளவாக இருந்தது. 1996 கிது தன புபுதுவ தனது 25ஆம் வெள்ளிவிழா கொண்டாடியதன் பின்பு "கைவிடுகின்ற அனுபவத்திற்கு" பூரண விடுதலையுடன் சுவாமிஅப்பா பதிலளித்தார். அன்று முதல் அனுபவிக்க வேண்டிய விண்ணக பேரின்ப வெளிபாடுகள் பல அவர் முன் இருந்தது.

ஆதலால் மத்துகம "மலை உச்சி வனத்து சந்திப்பில்" பெற்றுக் கொண்ட விண்ணகச் சுவை பலவற்றை தனக்கு நெருங்கிய பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்வதற்காக "அரசிற்கான மகனுக்கொரு மகன்" எனும் தியான மிகு செபம் உள்ளாகியிருந்தது. புபுதுவ மக்கள் பயணிக்க வேண்டிய முன்னேற்பாடு ஆவியானவரது ஒளியூடாக ஒளிர்விட்டுப் பிரகாசித்தது.

அன்புள்ள தந்தையே! நீங்கள் இன்று எமது மத்தியில் அமைதியுடன் இருக்கிறீர்கள். மௌனமாக இருக்கிறீர்கள். இவ்வுலகில் இருந்து விண்ணக தூதர்களின் எதிரொலியை அனுபவிக்கும் இறைவாக்கினராக நீங்கள் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட நிலையினூடாக மண்ணக விண்ணக வாழ்வினை தொடர்புபடுத்தியவாறு உள்ளீர்கள். அப்பா! உங்களினூடாக மகத்துவமிகு இறைவன் இலங்கை திருச்சபையினுள் நாட்டிய ஆவியானவரின் புரட்சிமிகு விதையின் துளிர் வளர்ந்து கிளை விட்டு பரவி இன்று நிமிர்ந்து நிற்பது மாபெரும் விருட்சமாகவாகும்.

அதன் நிழல் பெறுகின்ற, 50ஆம் வருடம் பூராகவும் ஆவியானவரது வழியை கண்டறிந்து அனுபவித்த

மறுமலர்ச்சி பெற்ற மக்கள் இன்று தமது களைப்பில் நின்று மீண்டும் உண்மையான இளைப்பாற்றியை ஆறுதலைப் பெற்றுள்ளனர்.

மகத்துவமிகு அப்பா தந்தாய்!

உங்களுக்கு இவ்விதம் உளம்திறந்த குருத்துவ மகன், முன்னோடியானவர், இரக்கமிகு தந்தை அவர்களுடன் 50 வருடம் பூராகவும் இறைவாக்கினரின் பாசத்தை பெற்றிட பெலவீனராகிய எம்மை பேறுபெற்றவர்களாக்கியமைக்காக உம்மை போற்றிப் புகழ்கின்றோம்.

நன்றி தந்தையே!!!

# தலைப்புரைக்கு அழைத்தல்

மெது மெதுவாக நாம் வந்தடைந்திருப்பது, காம்பீரமிகு யூபிலி வருட மங்களகரமான உன்னதமிகு கணத்திற்காகும். பரிசுத்த தாய் திரு அவைக்கு இறை வார்த்தையை முன் கொண்டு வருடத்தினை ஆரம்பிப்பதற்கும் தலைப்புடனான வருடத்தினை ஆரம்பிப்பதற்கும் வழியினை பிறப்பித்துக் கொடுத்தது திது தன புபுதுவ ஆகும். வருடம் பூராகவும் மக்கள் வாழும் விதமும் வார்த்தையை வாழ்விக்கும் விதமும் எமக்குக் கற்றுக் கொடுத்தது கிது தன புபுதுவ ஆகும். இப்பயணத்தின் ஐம்பதாம் வருட இரவே உதயமாகியுள்ளது. இக்கணத்தின் மங்கள இரவில் இவ்வருடத்திற்கான தலைப்புரைக்கே நாம் ஆயத்தமாகி உள்ளோம்.

அதற்காக எமது மத்திக்கு வருகை தந்திருக்கின்றது றஞ்சனா கவிரத்ன அம்மா ஆவார். ஆகவே நாம் இந்தக் கணத்தில் எம்மை வழிநடத்துமாறு ஆவியானவருக்கு இடமளிப்போம். அவர்களது வாயில் நின்று புறப்படுகின்ற யூபிலி வருட தலைப்புரையாக வெளிவரும் ஒவ்வொரு வார்த்தையும் ஆண்டவரது வார்த்தையாகி எமது உள்ளத்தில் பலனளித்திட எதிர் கொள்ளும் வருடத்தில் மாத்திரமல்ல, இன்னும் ஐம்பது ஆண்டுகள் பூராகவும் இயேசு கிறிஸ்துவை எமதாண்டவராக்கிக் கொண்டு வாழ இந்த உரையானது ஒளியாகிட, ஆண்டவரது வார்த்தையை எம்முன் வைக்கின்ற அம்மாவிற்காகவும், எம்மனைவருக்காகவும், முழு இதயத்தோடு செபிப்போம். நாம் தூய ஆவியானவரை அழைக்கப் போகின்றோம். எமது மத்தியில் எமது உள்ளங்களில் குடிகொள்ள அசைந்தாடி வருகை தருமாறு மன்றாடுவோம். இல்லங்களிலும்,

ஆலயங்களிலும் ஒன்று கூடியிருப்பவர்களுள் இருக்கின்ற ஆவியானவரை ஆவியானரது பாடலுடாக அழைப்போம். ஆழமான விசுவாசத்துடன் ஆழமான அன்புடன் ஆழமான கௌரவத்துடன் எம்மை மூடிக் கொண்டிட வருகை தருமாறு அழைப்போம். ஆவியானவரது வருகையினால் எம்மை ஆட்கொள்ளுமாறு எமது எலும்பு, தசை, நார்கள் ஊடாக ஆண்டவரது திரு இரத்தத்தினை எடுத்து சென்று எம்மைத் திடப்படுத்துமாறு நாம் ஆவியானவரை அழைப்போம்.

## யூபிலி வருடத்திற்கான
## ரஞ்சனா அம்மாவின் உரை
## ‘இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்”

1971 பரிசுத்த ஆவியானவரால் தொடங்கப்பட்ட கிது தன புபுதுவ (கிறிஸ்தவ மக்கள் மறுமலர்ச்சி) 50 வருடங்களாக பயணம் செய்து இன்று நாம் பொன்விழாவை கொண்டாடுகின்றோம். இன்று எங்களுக்கு மிகவும் ஒரு மகிழ்ச்சிகரமான நாள். இது ஒரு புனிதமான நாள். ஆனந்தத்தின் நாள்.

பார்த்த பார்வையில் நம்மை இருள் சூழ்ந்து இருப்பது போல் தெரிகின்றது. அரசியல் அரங்கைப் பார்க்கும் போது இந்நாடில் கொரோனா நிலைமை காரணமாக நமது அன்பான நாட்டு மக்கள் ஏராளமானோர் இறந்துள்ளனர். நிறைய பேர் பயப்படுகிறார்கள். இதற்கு நாங்கள் எவ்வாறு பதிலளிப்பது என்று மருத்துவர்களுக்கு ஒரு கேள்வி எழும்பியுள்ளது. மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாஸ்கா ஞாயிற்றுக்கிழமை நடந்த சோகத்திற்கு சரியான

பதில் இல்லாமல் நம்மக்கள் இன்னும் பரிதாபகரமான அனுபவத்தில் உள்ளனர்.

அதே நேரத்தில் கிது தன புபுதுவ என்ற வகையில் நாமும் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல வேதனையான அனுபவங்களைக் கடந்து வந்தோம். இந்த ஜெபத்திற்கு நான் தயாராகிக் கொண்டிருந்த போது ஆண்டவர் தம்முடைய அற்புதமான அழகான வாக்குறுதியை எனக்கு நினைவூட்டினார். புபுதுவையில் இருக்கின்ற எம் அனைவருக்கும் பழக்கப்பட்ட, நாம் அனைவரும் அன்பு செய்கின்ற வார்த்தை இது. உரோமர் 8:28 **’கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கின்றார்’** ஆகையால் நான் குறிப்பிட்ட எல்லா நிலையும் அதாவது கடினமான, வேதனையான, அனுபவங்களைக் கூட நம் கடவுள், அன்பான இறை தந்தை அனைத்தையும் நன்மையாக மாற்றுவார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். எனவே நாம் ஏன் புகழக் கூடாது? இன்று ஏன் மகிழ்ச்சியான நாளாக இருக்கக்கூடாது? எனவே எங்கள் பொன்விழாவை நாம் கொண்டாடும் இன்று எங்களுக்கு ஒரு சிறப்பான நாள். கிது தன புபுதுவ என்ற புத்தகம் இன்று ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குகின்றது என்று நான் நினைக்கிறேன்.

பரிசுத்த ஆவியானவர் அந்த அத்தியாயத்தை உருவாக்கியவர். ஆகையால் நாம் மிகுந்த மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் எல்லா தடைகளுக்கும் மத்தியில் கடவுளின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் அச்சமின்றி தைரியமாக இதனை எதிர்கொள்ளப் போகிறோம். நான்கு ஆண்டுகளுக்கு

முன்பு முன் ஆயத்த ஜெபத்தின் போது தான், இந்த பொன்விழா ஆண்டிற்காக தலைப்பாக நம்முடைய இறை தந்தையானவர் **'இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்'** என்ற வார்த்தையை எங்களுக்கு பரிசளித்தார். இந்த வார்த்தையை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டோம். அந்த சமயத்தில் அவருடைய வழிகாட்டுதலை நான் இன்னும் நினைவில் வைத்திருக்கின்றேன். புபுது மக்கள் என்றவகையில் உங்கள் தொடக்கத்திற்குச் செல்லும்படி இறை ஆண்டவர் சொன்னார். அப்படியானால் கிது தன புபுதுவ (கிறிஸ்தவ மறுமலர்ச்சி) தொடங்கப்பட்ட ஆண்டு 1971 நாம் அங்கு சென்றால் இந்த ஜுபிலி ஆண்டை இன்னும் அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ள முடியும். எங்கள் ஆரம்பம் எப்படி நடந்தது? இந்த ஜுபிலி ஆண்டின் இந்த மணித்தியால நேரத்தில் தான் புபுதுவ என்ற குழந்தை இந்த உலகில் மிகவும் வேதனையான துன்பங்களுக்கு மத்தியில் பிறந்தது. அல்லது கடவுள் அதைப் படைத்தார்.

புபுதுவ என்று அழைக்கப்படும் இந்த விதை சுவாமி அப்பாவின் இதயத்தில் அல்லது அவருடைய ஆத்துமாவில் அல்லது அவருடைய வயிற்றில் உருப்பெற்றது. அதை இப்போது கருக்கலைப்பு செய்கின்றார்கள். புபுதுவ என்ற குழந்தை பிறந்தவுடனேயே அழிப்பதற்கு உலகம், சரீரம், பசாசு ஆகிய மூவரும் இந்த குழந்தையைக் கருக்கலைப்பதற்கோ அல்லது அந்தக் குழந்தையைஅழிப்பதற்கோ கடுமையான போரில் ஈடுபட்டனர். ஆனால் அதன் ஆரம்ப கர்த்தா பரிசுத்த ஆவியானவர் என்ற படியினால் உலகம் சரீரம் பசாசினால் சுவாமி அப்பாவின் ஆத்துமத்தினுள், வயிற்றினுள் கருத்தரித்த இவ் இறைவார்த்தை எனும் புதுமையான விதையை கொல்ல முடியவில்லை. இந்த குழந்தையை

கடவுள் மிகவும் அழகான குழந்தையாக பிறக்கச் செய்தார். இந்தக் குழந்தை பிறந்தது. ஏன் இந்தக் குழந்தையை கொல்ல முயன்றார் என்ற கேள்வியைப் பார்த்தால் இது எங்களுக்கு ஆச்சரியமான கேள்வி அல்ல. ஏன் என்றால் பரிசுத்த ஆவியானவர் பூமியெங்கும் அவருடைய இந்த செயல்பாட்டை செய்து கொண்டு போகும் போது, பரிசுத்த ஆவியின் செயலை பலரால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே நம் நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதும் இந்த மறுமலர்ச்சி என்னும் குழந்தையை ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை ஆச்சரியப்படுவதற்கில்லை. எனக்கு ஞாபகம் வருகின்றது 23ம் அருளப்பர் திருத்தந்தை அக் காலத்தில் திருச்சபை ஒரு இறந்த சபை போல உணர்கிறேன், எவ்விதப் புத்தெழுச்சியும் இல்லை. திருச்சபை இறந்து கொண்டிருக்கிறதே என்று அவர் மிகவும் சோகமாக இருந்தார். அவர் ஒன்று கூடல் ஒன்றை அழைத்தார். அந்த ஒன்று கூடலுக்கு கார்தினல்மார்கள் எனக்கு ஞாபகம் உள்ள விதத்தில் 20 பேர் மட்டில் தொடர்பு கொண்டிருந்தார்கள். திருத்தந்தை அவர்களுக்கு உரையாற்றி "நாங்கள் இரண்டாவது வத்திகான் சபையை கூட்டலாமா?" இதை ஆரம்பிக்க வேண்டுமல்லவா? பாருங்கள் திருச்சபை இறந்து கொண்டிருப்பதைப் போல தெரிகிறது. திருச்சபை ஆரம்பத்திற்கு செல்ல வேண்டும் அல்லவா? பாருங்கள் பரிசுத்த ஆவியின் செயல்பாடுகள் இல்லை அல்லவா? திருச்சபை சோர்வடைந்துள்ளது அல்லவா? திருத்தந்தையின் ஆவணம் ஒன்றில் இவ்வாறு கூறுகின்றார். ஒரு ஊசி கீழே விழுந்தாலும் சத்தம் கேட்கும் அளவிற்கு அமைதி இருந்தது. இந்த கார்தினல்மார்கள் தன்னிடம் வந்து கைதட்டி புகழ்ந்து என்னை முத்தமிடுவார்கள் என்று அவர் நினைத்துக் காத்துக் கொண்டிருந்தார். நீங்கள் அனைவரும் ஏன் வெறித்துப் பார்க்கிறீர்கள்?

நீங்கள் ஏன் தரையைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் ஒருவரிலும் சிரிப்புக் காணப்படவில்லையே? ஏன்? எனக்கு இப்போது சோர்வாக இருக்கின்றது. என்னால் மேலும் இங்கே அமர்ந்து இருக்க முடியாது. எனவே நான் இப்போது இங்கிருந்து வெளியேறுகிறேன். என்று xxiiiவது அருளப்பர் அந்த இடத்திலிருந்து எழுந்து சென்றார். இவை வத்திகான் ஆவணங்களில் உள்ள உண்மையான செய்தியாகும்.

பின்னர் திருத்தந்தை செபத்திற்குச் சென்றார். செபத்திற்குச் சென்ற அவருக்கு இந்த மறுமலர்ச்சி அடையும் வரை காத்திருக்க முடியவில்லை. திருச்சபையில் தொடக்கமான பெந்தகொஸ்து நாளில் பரிசுத்த ஆவியின் செயல்பாட்டை காண அவர் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார். அவர் தொடர்ச்சியாக செபித்துவிட்டு, அவர் மக்களிடையே வரும் நாளில்  ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பேதுருவானவரின் வத்திகானில் கூடி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. திருத்தந்தை ஜன்னல் வழியாக பாாத்து எனக்கு தேவை திருச்சபை அந்த தொடக்க இடத்திற்கு சென்று ஒரு பெரிய மறுமலர்ச்சியைக் காண விரும்புகிறேன் என்று கூறினார்.

பரிசுத்த ஆவியின் செயல்பாடுகளைக் காண்பதற்கு நான் II வத்திகான் சபையை கூட்ட விரும்புகிறேன் என்றார். மக்கள் கூச்சலிட்டுப் பாராட்டினார்கள். அவர்கள் கைதட்டிக் கொண்டே இருந்தார்கள். எத்தனை நிமிடம் எனக்கு நினைவு இல்லை. திருத்தந்தை இந்த வார்த்தையையும் அவர்களது பிரதி செயலை கடவுளின் விருப்பமாக ஏற்றுக்கொண்டு II வத்திகான் சபையை கூட்டினார். இதற்கான ஆயத்தமாக அவர் பிரபுக்களிடம் அதற்கு தேவையான ஆவணங்களைத் தயாரிக்கும் படி கேட்டுக் கொண்டார்.

அவரிடம் கொண்டு வரப்பட்ட ஆவணங்களில் பரிசுத்த ஆவியானவர் என்ற பெயர் ஒரு முறை கூட குறிப்பிடப்படவில்லை. திருத்தந்தை ஆச்சரியப்பட்டார். அவர் தனது ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார். அவர் கூறினார், இது என்ன? பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் எவ்வாறு பெந்தகொஸ்து? நாங்கள் எப்படி மேல் மாடி அறைக்கு செல்வது? பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் திருச்சபை ஆரம்பமாகிய முதல்நாளிற்கு நாம் எவ்வாறு செல்லமுடியும்? இது பயனற்றது, மீண்டும் எழுதும் படி கொடுத்தார். இரண்டாவதாக தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் பரிசுத்த ஆவியின் செயல் முறையை பலமுறை குறிப்பிடப்பட்டிருந்தது.

அன்பிற்குரியவர்களே! இந்த யுகத்தில் தான் கிது தன புபுதுவ இலங்கையில் ஆரம்பித்து இருந்த போது, இதனை விளங்கிக் கொள்ள முடியாதிருந்தது புதுமையானதொன்றல்ல. ஆயினும் பரிசுத்த ஆவியானவர் இந்தக் குழந்தை மேல் கைவைப்பதற்கு எவருக்கும் இடமளிக்கவில்லை. 1971 குமாரனைப் போன்று மகன் ஒருவர் பிறந்தார். அவருக்கு இப்போது 50 வயது. அவர் இப்போது உயர்ந்து கொழுத்து விட்டார். அவர் சில வேளையில் குறம்புத் தனமும் செய்வார். ஆனால் தண்டிக்கும் போது கீழ்ப்படிவார். இந்த புதுமையான மகனை அழித்திட கை நீட்டுவதற்கு சர்வ வல்லமையுள்ள இறைவன் எவருக்கும் இடமளிக்கவில்லை. என்பதை பொன் விழா எடுக்கும் இந்த நாளினில் நான் கூற விரும்புகின்றேன்.

கிது தன புபுதுவை இந்த உலகத்தில் எந்த மனிதருக்கும் அழித்திட முடியாது. என் நேசத்திற்குரிய பிள்ளைகளே, எனக்குள் செயல்புரிகின்ற தூய ஆவியானவரின்

இந்த உலகில் எந்த மனிதனாலும் கிது தன புபுதுவவை அழிக்க முடியாது. அன்புள்ள பிள்ளைகளே, ஒரு மனிதன் வந்து எனக்குள் செயலாற்றுகின்ற இந்த பரிசுத்த ஆவியானவரை என்னுள் இருந்து அப்புறப்படுத்த முடியுமா? உங்களுக்குள் இருக்கின்ற பரிசுத்த ஆவியினவரின் செயலை ஒருவராலும் இழுத்து அப்புறப்படுத்த முடியுமா? இல்லை. அதனால் தான் இன்று இறைவனின் வல்லமையால் நிரம்பும் படி நான் உங்களுக்கு சொல்கிறேன். நீங்கள் பரிசுத்த ஆவியானவரை பெறும் போது வல்லமை பெறுவீர்கள். என்ன இந்த சக்தி? நமது அரசியல்வாதிகள் என்ன செய்கிறார்கள் என்று தெரிகிறதா? மற்றவர்களின் உடமைகளை திருடுவதற்கும், மற்றவரை அநீதியாக தீர்ப்பிடவுமா இந்த வல்லமை? தங்கள் சுயநல காரியங்களைச் செய்வதற்காகவா இந்த வல்லமை? இல்லை அது ஒரு தெய்வீக வல்லமை? இந்த வல்லமையை ஒரே ஒரு காரியத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்று தைரியமாக அறிவிப்பதற்கே அந்த வல்லமை. ஆகவே என் நாசியில் மூச்சு இருக்கும் வரை இயேசு கிறிஸ்துவே என் வாழ்க்கையில் ஆண்டவர் என்று நான் எப்போதும் கூறுவேன். அதை யாரும் பிரித்து எடுக்க முடியாது. இதை யாராலும் காயப்படுத்த முடியாது.

ஆகையால், உலகு எங்கிலும் உள்ள புபுது மக்களிடம் கேட்டு கொள்வது என்னவென்றால், இன்று எங்கள் பொன்விழா நாளில் ஆரம்பத்தில் நீங்கள் தொடங்கிய **“இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்”** என்ற அந்த அனுபவத்தை யாரிடமும், யாதொன்றிற்காகவும் விட்டுக் கொடுக்கவோ காட்டி கொடுக்க வேண்டாம். எங்களுக்கு இனி அரசர்கள் இல்லை. எங்களிடம் இனி வேறு ஆண்டவர் இல்லை. எங்களிடம் ஒரே கீரிடம் மட்டுமே. இயேசுவின் கீரிடம்

மட்டுமே. அவர் அரசர்களின் அரசர் ஆவார். பிரபுக்களின் பிரபு இயேசுவே ஒரே ஆண்டவர். ஒரே ஒரு மீட்பா

அன்பார்ந்தவர்களே, சீடர்கள் இயேசுவை பிடித்தார்கள். முத்தமிட்டர்கள். சீடர் பேதுரு முத்தமிட்டாரா? என்று எனக்கு தெரியவில்லை. அருளப்பர் அப்போஸ்தலர் முத்தமிட்டு இருக்க வேண்டும். அவர்கள் ஒன்றாக ஒரு வாழைப்பழம் மற்றும் ஒரு பாற்சோறு ஒன்றை சாப்பிட்டிருக்க வேண்டும். ரொட்டி ஒன்றில் நல்ல மீனை பொரித்து கறியுடன் சாப்பிட்டுயிருப்பார்கள். இயேசு செய்த இந்த அற்புதங்கள் அனைத்தையும் அவர்கள் கண்டார்கள். இலாசருவை மரித்தோரிலிருந்து எழுப்பபடும்போது அங்கு இருந்தார்கள். பார்வையற்றவர்களுக்கு பார்வை கொடுத்த போது அவர்கள் அங்கு இருந்தார்கள். இருப்பினும் மேல்மாடி அறையில் பெற்ற அனுபவத்திற்கு பின்பு தான் இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்று அறிக்கையிட்டார்கள். அதுவரைக்கும் அவர்கள் மற்றவர்களுக்கு பயந்தார்கள். பிலாத்துக்கு பயந்தார்கள். இயேசுவை, தண்டனை தீர்ப்பு கொடுப்பதற்கு அழைத்து செல்லும் போது, பேதுருவானவர் வெளியே வருவதற்கு தயங்கினார். பயத்துடன் நடுங்கினார். இயேசுவை பிடித்து முத்தமிட்டு அனைத்தையும் கண்டு இருந்தாலும் பயத்தினால் ஒழிந்து கொண்டார்கள். அவர்கள் சிலுவையின் அடிவாரத்தில் இருக்கவில்லை. பாருங்கள் அவர்கள் பரிசுத்த ஆவியானவரை பெற்ற போது அந்த பயம் அகன்று விட்டது. இயேசுவை ஏற்றுக் கொள்வதற்கு இருந்த எல்லா பயங்களும் நீங்கி விட்டன. மரணத்திற்கும் பயப்படவில்லை.

எனது அனுபவம் ஒன்று நினைவிருக்கிறது. நான் எப்பொழுதும் உங்களுடன் பகிர்ந்து இருக்கின்றேன். எனக்கு டெங்கு வந்து மருத்துவமனைக்கு சென்று மருத்தவர்

என்னை பார்த்து இப்போது நீங்கள் தீவிர சிகிச்சை பிரிவில் வைக்கப்பட வேண்டும் உங்கள் இரத்த அளவு இயல்பை விட பத்து மடங்கு குறைவாக உள்ளது. தீவிர சிகிச்சை பிரிவில் இரண்டு நாட்கள் கழித்து மருத்துவர் என்னை பார்த்து "நான் இதற்கு முன்பு கண்டதில்லை திருமதி கவிரத்ன உங்களது முகம் சிவந்த நிறமா?" என்று கேட்டார். நான் சொன்னேன் என் முகத்தை என்னால் பார்க்க முடியாது என் கைகளை பாருங்கள். மிகவும் சிவப்பாக இருக்கின்றது. இது என் கைகளின் நிறம் அல்ல என்பதை நான் சுட்டிகாட்டினேன். அந்த மருத்தவர் கூறினார் நீங்கள் குணமாகிக் கொண்டு இருக்கிறீர்கள் என்று சொல்லி விட்டு அவர் சென்று விட்டார். அவர் இறப்பதற்கான நேரம் இது என்று அவர் சொல்லப் போகிறார் என்று எனக்குத் தெரியும் பின்னர் மருத்துவர் என்னைப் பார்க்க வந்தார். ஐ.சி. யுவில் திரைச்சேலை வழியாக அவர்கள் கதைப்பது எனக்கு கேட்கின்றது என்பதை மருத்துவர் மறந்திருக்கலாம். அவர் தாதியிடம் அவர் இறக்கப் போகின்றார் இரத்த அழுத்தம் கொஞ்சம் மாறினால் தனது செல்போனை அழைக்குமாறு சொன்னார்.

நான் நன்றாக ஓய்வெடுத்தேன் இரண்டு மருத்துவர்கள் நான் இறக்கப் போவதாக கூறினார்கள். எனக்கும் வாந்தி, உடல் வலி அதிகரித்து கொண்டு இருந்தன. நான் இறைவனிடம் கூறினேன். ஆண்டவரே எனக்கு நிச்சயம் ஒன்று உறுதி. இது என் கடைசி மணி நேரமாக இருந்தால் நீங்கள் எனக்கு விண்ணகத்தை கொஞ்சம் காட்டுங்கள் நான் மிகவும் நன்றாக அந்த இறந்தவர்களைப் போல நான் கண்களை மூடினேன். இருந்து - இருந்து - பார்த்தேன் நான் விண்ணகத்தின் ஒரு துளியைக் காணவில்லை. நான் உட்கார்ந்தேன் இது என் மரண தருணம் அல்ல

என்று எனக்குத் தோன்றியது. ஆனால் ஒரு நற்செய்தி என்னவென்றால் நான் இறக்க பயப்படவில்லை. ஏன் என்றால் இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் நான் அவரது வாக்குறுதிகளை நம்புகிறேன். இயேசு நமக்கு என்ன சொல்கிறார்? நீங்கள் என்னை நம்பினால் என் தந்தையின் வீட்டில் நிறைய அறைகள் உள்ளன. நான் சிலுவையில் அறையப்படுவது இறந்தவர்கள் உயிர்த்தெழுவது உங்களை அந்த இடத்திற்கு அழைத்துச் செல்வதற்காகவே. நாம் ஏன் மரணத்திற்கு பயப்பட வேண்டும்?

அன்புள்ள பிள்ளைகளே! இருளைப் பற்றி பயப்பட வேண்டாம். நம்மை எவ்வளவு இருள் சூழ்ந்தாலும் புபுதுவை இருள் சூழ்ந்து இருந்தாலும் பலர் என்ன சொன்னாலும் இது பொய்கள் ஆட்சி செய்யும் சகாப்தம் பொய்களால் ஏமாற வேண்டாம். என்ன சொன்னாலும் உண்மை உண்மை தான். யாராலும் உண்மையை மாற்ற முடியாது. நீங்கள் சத்தியத்திற்கு பயந்து ஒரு பொய்யைக் கூறினால், அது தோற்கடிக்கப்படும். ஆகையால் பயப்பட வேண்டாம். இறந்தாலும் உண்மையை கூறிவிட்டு இறந்து போவோம். உங்களுக்கு தெரியும் நீங்கள் எங்கே போவீர்கள் என்று உங்களுக்கு இயேசுவை அரவணைத்து கொள்ள முடியும். நீரே எனது ஆண்டவர். உங்களுக்கு விளங்குகின்றதா? என்ன ஒரு அற்புதமான அனுபவத்திற்கு ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார் என்று.

பெந்தகோஸ்துக்கு முன்பு அவர்கள் சீசர் எங்கள் ஆண்டவர் என்று சொன்னார்கள். பேதுரு பாதையில் நடந்து கொண்டு போகும் போது மறுபுறம் ஒருவர் சீசர் ஆண்டவர் என்று கூறும் போது, பேதுரு என்ன சொல்லியிருப்பார். அந்திரேயா, யாக்கோபு என்ன சொல்லியிருப்பார்கள். என்ன யோவானும் கூறியிருக்கலாம். அவருடைய

உயிர்த்தெழுதலுக்கு பின்பு அவர்கள் சீசர் அல்ல ஆண்டவர் , என்ன மடமையான பேச்சு அவர் யார்? இன்று இருந்து நாளைக்கு இறந்து போகின்ற சாதாரண மனிதன் மாத்திரம் தான். அவருக்கு எவ்வாறு நீங்கள் என்று கூறுவது என்று அவர்கள் சீசரை ஆண்டவர் என்று கூற மறுத்தார்கள். நீங்கள் ஆயத்தமா அவ்வாறு கூறுவதற்கு நீங்கள் ஆயத்தமா? ஆம் நாங்கள் ஆயத்தம்.

புபுது மக்கள் அனைவரும் மனிதர்களது தாக்கத்திற்கு உட்படாமல் ஒரே குரலில் இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்று எப்போதும் கூறுவதற்கு ஆயத்தமாக உள்ளனர். அவரைத்தவிர எங்களுக்கு வேறு ஆண்டவர் இல்லை. எமது ஆண்டவர் யார்? எலிசபெத் மகா ராணி நம் நாட்டின் தலைவர்கள் அவர்கள் அனைவரும் இறந்து விடுவார்கள். இயேசுவின் உயிர்த்தெழுதல் மூலம் அவர் மனித குலத்திற்கு மட்டுமல்ல. முழு பிரபஞ்சத்திற்கும் ஆண்டவரானார். மரங்களில் விலங்கு இராச்சியத்தில் முழு பிரபஞ்சத்திலும் மணலின் ஒவ்வொரு சக்தியையும் மேலோங்கி சென்றார். அவருடைய உயிர்த்தெழுதலுக்கு பிறகு மனிதனால் தொட முடியாத வகையில் அற்புதமான விதத்தில் அவர் முழு பிரபஞ்சத்தின் ஆண்டவராக ஆனார். அவர் ஊடுருவி செல்ல முடியும். நான் பேசும் போது அவருக்கு அவுஸ்ரேலியாவில் சங்கத்தில் உள்ள அனைவரையும் ஸ்பரிசிக்க முடியும். நான் பேசும் போது அவருக்கு இத்தாலியில் உள்ள அனைவரையும் ஸ்பரிசிக்க முடியும். இஸ்ரேலில் உள்ள அனைவரையும் ஸ்பரிசிக்க முடியும். இலங்கையில் உள்ள அனைவரையும் ஸ்பரிசிக்க முடியும்.

இயேசு உயிர்த்தெழுப்பப்பட்டது மட்டுமல்லாமல்

அவர் மகிமை அடைந்தார். அவருக்கு எங்கும் எந்த நேரத்திலும் ஊடுருவி செல்ல கூடிய புதுமையான ஒரு வல்லமை ஒரு அற்புதமான வல்லமை அவருக்கு இருந்தது. மேலும் அவர் பூமியின் இறைவன். பரலோகத்திலும் இறைவன் நரகத்தின் வாயில்களுக்கான சாவியும் அவரிடம் உள்ளது. பிசாசு தற்பெருமை காட்ட முடியும். அவனால் என்ன செய்ய முடியும். அவன் விரும்பினால் கேளி கூறுவான். அவன் விரும்பினால் பொய் சொல்லுவான் அவனால் அவரிடம் என்ன சொல்ல முடியும். சாவி இயேசுவின் கையில் உள்ளது. அவருக்கு பிசாசை விரட்டி உன்னுடைய கூட்டிற்கு போ என்று கதவைப் பூட்ட முடியும். பரலோகத்திலும் பூமியிலும் நரகத்தின் வாசல்களிலும் சகல வல்லமையையும் அதிகாரமும் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவிடமே உள்ளன.

இந்த அற்புதமான வெளிப்பாட்டை மேல் மாடி அறையின் அற்புதமான அனுபத்தில் ஆவியானவரை பெற்ற பின்னரே அவர்கள் கண்டார்கள். பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்று எந்த மனிதனும் கூற முடியாது. அதனால் தான் பரிசுத்த ஆவியானவரை ஏழு முறைகளாக தொடர்பு கொள்வதற்கு நமக்குக் கற்றுக் கொடுத்தார். பரிசுத்த ஆவியினால் பிணைக்கப்பட்ட வாழ்க்கையை வாழுங்கள். பரிசுத்த ஆவியுடன் இணைந்து இருங்கள். எல்லா நேரமும் பரிசுத்த ஆவியானவருக்கு விழிப்புற்று இருங்கள். அப்போது பொய் சொல்ல முடியாது. இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் அத்தகைய நாவினால் வேறு எவரையும் ஆண்டவர் என்று சொல்ல முடியாது. பொய் சொல்லவும் முடியாது.

ஆகையால் 1கொரிந்தியர் 12:3 இவ்வாறு இருக்கின்றது. கடவுளின் ஆவியால் ஆட்கொள்ளப்படும் பேசும் எவரும்

“இயேசு சபிக்கப்பட்டவர்” எனச் சொல்ல மாட்டார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் “இயேசுஆண்டவர்” எனச் சொல்ல முடியாது. இதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு எங்களை போல வழியில் கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் சந்திக்காத இயேசுவை கண்களால் பார்த்திராத பவுல் அடிகளார் கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில் இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்று கூறுகிறார். என்ன ஒரு அற்புதமான அழகான அனுபவம்! கிறிஸ்துநாதர் இல்லாமல் பிதாவை அணுகவும் முடியாது. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் கிறிஸ்துவே ஆண்டவர் என்று சொல்ல முடியாது. அதன் பொருள் என்ன? பரிசுத்த திரித்துவமே இயேசு நாதர் ஆவார். பிதாவானவரும் பரிசுத்த பிதாவாகிய கடவுள் என்ன செய்தார்?

இறை தந்தை எங்களை மிகவும் அன்பு செய்கிறார். கடவுளுடைய வார்த்தையைக் கடைப்பிடிப்பதன் மூலம் மக்களுக்கு அழகான வாழ்க்கையை வழங்குவதற்காக அவர் முயற்சி செய்தார். மனிதன் அதைக் கேட்கவில்லை. அவன் எப்போதும் கீழ்ப்படியவில்லை. இறுதியாக பிதாவால் இதைத் தாங்க முடியாது. அவர் நமக்கு எவ்வளவு அன்பு செய்தார். என்றால்

யோவான் 3:16 கூறுகிறது. தன் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வை பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மீது அன்பு கொண்டார். ஆம் இறைவனை மனிதராக மாற்றினார். அவர் தனது மகனை உணர்வுகள், பசி, சோகம், கோபம் கொள்ளும் மனிதராக உலகிற்கு அனுப்பினார்.

பிரியமானவர்களே, எனது செபத்தில் எனக்குத் தோன்றியது இன்று நாம் இயேசு கிறிஸ்து ஆண்டவரை சக்தி வாய்ந்த முறையில் அனுபவிக்க வேண்டுமென்றால் அதில் நுழைவதற்கு நாம் இன்று இரண்டு இடங்களைப் பற்றி தியானிக்க வேண்டும் என்று உணர்ந்தேன். முதல் இடம் சிலுவையின் அடிவாரம் இரண்டாவது இடம் மேல்மாடி அறை இந்த இரண்டையும் நாம் நோக்குகின்ற அளவிற்கு தான் கிறிஸ்து ஆண்டவரின் இறை ஆளுமைக்கு இந்த பொன் விழாவின் நாளில் அற்புதமான அனுபவத்திற்கு நாம் உட்புக முடியும்.

கடவுள் ஆபிரகாமை அழைத்தார். மோசேயை அழைத்தார். இன்னும் பலரை அழைத்தார். மக்களை ஒன்று கூட்டி கடவுள் மனிதர் மேல் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்த முயற்சி செய்தார். ஆனால் மனிதர் எப்போதும் கிளர்ச்சி செய்தனர். மனிதன் எப்போதும் கடவுளுக்குக் கீழ்படிய மறுக்கிறான். நான் யாத்திராகமம் புத்தகத்தில் மிக அழகான ஒரு பகுதியை கண்டேன். யாத்திராகமம் 3:1-6 மோசே மிதியானின் அர்ச்சகராகிய தம் மாமனார் இத்திரோவின் ஆட்டு மந்தையை மேய்த்து வந்தார். அவர் அந்த ஆட்டு மந்தையை பாலை நிலத்தின் மேற்றிசையாக ஓட்டிக் கொண்டு கடவுளின் மலையாகிய ஒரேபை வந்தடைந்தார். அப்போது ஆண்டவரின் தூதர் ஒரு முட்புதரின் நடுவே தீப்பிழம்பில் அவருக்கு தோன்றினார். அவர் பார்த்த போது முட்புதர் நெருப்பால் எரிந்து கொண்டிருந்தது. ஆனால் அம்முட்புதர் தீய்ந்து போகவில்லை.

ஏன் முட்புதர் தீய்ந்து போகவில்லை. ? இந்த மாபெரும் காட்சியைப் பார்ப்பதற்காக நான் அப்பக்கமாக செல்வேன் என்று மோசே கூறிக்கொண்டார்.

ஆவ்வாறே பார்ப்பதற்கு அவர் அணுகி வருவதை ஆண்டவர் கண்டார். மோசே மோசே என்று சொல்லிக் கடவுள் முட்புதரின் நடுவிலிருந்து அவரை அழைக்க அவர் “இதோ நான்” என்றார்.

ஆவர் “இங்கே அணுகி வராதே உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றி விடு ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம்” என்றார்.

மேலும் அவர் “உங்கள் மூதாதேயரின் கடவுள். ஆபிரகாமின் கடவுள் ஈசாக்கின் கடவுள் யாக்கோபின் கடவுள் நானே என்றுரைத்தார். மோசே கடவுளை உற்று நோக்க அஞ்சியதால் தம் முகத்தை மூடிக்கொண்டார்.

பழைய ஏற்பாட்டில் மோயீசனை அழைத்த இந்த அன்பானவரை நெருங்கிட மோயீசன் பயந்தான். எனவே தான் முழு பழைய ஏற்பாட்டிலும் கடவுள் பயங்கரமான கடவுள். அவரை நெருங்க முடியாது. நெருங்கும் போது தீயினால் எரிவதைப் போல் இருக்கும். ஆனால் கடவுள் பரிபூரண அன்பானவர். கடவுள் தனது அன்பை நாளுக்கு நாள் வெளிப்டுத்தி வந்தார். மனிதனுக்கு இந்த அன்பைப் புரிந்து கொள்ள முடியவில்லை மனிதன் கடவுளுக்கு எதிர்த்து நின்றான். கடவுளோ, மனிதனை மிகவும் நேசித்தார். கடவுள் ஒரு அற்புதமான காரியத்தைச் செய்தார். கடவுள் தனது மகனை ஒரு மனிதனாக உலகிற்கு அனுப்பியது மட்டுமல்லாமல் தம்முடைய குமாரனை மனிதரின் கைகளில் ஒப்புக் கொடுத்தார். மக்கள் அவரைத் தொட்டு முத்தமிட்டிருக்கலாம். அவரிடமிருந்து அற்புதங்களைப் பெற்றிருக்கலாம். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள்? அந்த சீனாய் மலை முட்புதர் எரியத் தொடங்கியது. இயேசு ஆண்டவரை சிலுவையில் வைத்து அவர்கள் சிலுவையில்

ஆணியால் அறைந்து கொன்றார்கள். சித்திரவதை ஏழுக்கும் மேற்பட்ட சித்திரவதைகளை வழங்கினார்கள். முகத்தில் துப்பி அசிங்கமான வார்த்தைகளால் பேசி நீ கடவுளின் மகன் என்றால் கீழே இறங்கிவா என்று அசிங்கமான கதை சொல்லி ஏளனம் செய்தனர்.

இப்போது மனிதர் நெருங்கிச் சென்றது மட்டுமல்லாமல் படைப்பாளராம் கடவுளைப் பிடிக்கவும் கொல்லவும் மனிதனால் முடிந்தது. கடவுள் மனிதனை அந்த அளவிற்கு நெருங்கி வந்தார். மனிதனிடம் நெருங்க அவர்கள் கடவுளின் பெயரைத் தூற்றி முகத்தில் துப்பி முட்களால் முடி சூடி கொடுக்கக் கூடிய வதை அனைத்தையும் கொடுத்து இயேவைக் கொன்ற போது இயேசுவின் தாயார் சிலுவை அடிவாரத்தில் ஆதலால் நாம் இறைவனை அன்பு செய்ய விரும்பினால் இயேசுகிறிஸ்துவை எமது ஒரே ஆண்டவராக்கிக் கொள்ள வேண்டுமெனில் நாம் சிலுவையின் அடிவாரத்திற்கு செல்லச் செல்ல ஆண்டவர் மீது அன்பு அதிகரிக்கும். அப்போது அன்று மோசேயை சுடர்விட்டெரியும் முட்புதர் அருகே வரவேண்டாம் என்று கூறிய கடவுள் கல்வாரி மலையில் மனிதனை அதனைச் செய்ய அனுமதித்தார். அந்த நெருப்பு அந்த முட்புதரை விட எவ்வளவு கொடூரமாக இருந்திருக்கும்? அம்மாவின் இதயம் சிலுவையில் தொங்கியிருக்கும் இயேசுவைப் பார்த்த போது, தாயைப் பார்த்துக் கூறுகின்றார் “இதோ உன் தாய்” என்றும் கூறுகிறார். கடவுளின் தாயின் தீ எப்படிபட்டதாய் இருந்திருக்கும் என எண்ணுவதற்கு தேவ தாயாரை நாம் அமைதியோடு உற்று நோக்கியவர்களாக இருக்க வேண்டும்.

என் ஜெபத்தில் தோன்றியதனை நான் எழுதினேன். எனக்கு தோன்றியது கடவுளின் தாய் இப்படி சொல்லியிருப்பாரென

ஆம் நான் இப்போது உங்கள் தாய் அல்ல. நீங்கள் என்னை ஒரு உலகளாவிய தாயாக ஆக்கியுள்ளீர்கள். யோவானின் அம்மா ஆம் நான் இப்போது இங்குள்ள அனைத்து புபுது மக்களுக்கும் முழு அகில மக்களுக்கும் அம்மா ஆகி உள்ளேன். என்னை இப்போது அம்மா என அழைக்க முடியாது ஆமென் ஆமென் இந்த வார்த்தை எவ்வளவு உண்மை என்று கடவுளின் தாய் தியானித்திருக்க வேண்டும். அப்பொழுது தேவனுடைய தாய் ஆம் நீர் இப்போது என் ஆண்டவர் நீரே ஆண்டவர் கடவுளின் தாய் சிலுவையின் அடிவாரத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கண்டார். நான் யாரை நம்ப முடியும்? அவருள் தான் எனக்கு மீட்பு இருக்கிறது. நீரே என் ஆண்டவர் நீங்கள் யோவானின் ஆண்டவர் இங்கே உதவியற்றுள்ள பெண்களின் ஆண்டவர் நீரே என் மீட்பர் என் முழு வாழ்க்கை நிலைப்பும் உமக்குள்ளேயே உள்ளது. நீங்கள் எல்லா மனிதர்களதும் மீட்பாளர் என்றும் நீங்கள் சொன்னது சரி என்றும் சிலுவையின் அடிவாரத்தில் உள்ள கடவுளின் தாய் கிறிஸ்து ஆண்டவரை அமைதியாக ஏற்றுக் கொண்டிருக்கலாம் நேற்று இரவு என் ஜெபத்தில் உணர்ந்தேன்.

நான் உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைச் சொல்லப் போகிறேன். “ஆண்டவருடைய நாமத்தினாலே துன்புறுவோரை அவரை உயர்த்துகிறார்” இது அற்புதமான செய்தி அந்த துன்பத்திலும் ஆண்டவரின் தாய் எவ்வாறு நிமிர்ந்து நின்றார் என்று பாருங்கள். ஏன் நிமிர்ந்து நிற்க வேண்டும்? இயேசுவை மிகவும் அன்பு செய்தார் இயேசுவின் பணி முடியும் வரை தாய் காத்திருக்கிறார். நாளை இயேசு அதனால் தான் இந்த உலகத்திற்கு வந்தார். அதைக் காணும் வரை ஆவலுடன் காத்திருக்கிறார். இன்று தேவ

அன்னை எங்கே இருக்கிறார்? பரலோக இராஜேஸ்வரி முடிசூட்டப்பட்ட தாய் இன்று பேதுரு எங்கே? பேதுரு ஒரு புனிதர் பரலோகத்தில் இருக்கின்றார். அங்கே தான் துன்பத்தின் மகிழ்ச்சி துன்பத்தின் வெற்றி!

ஆகையால் எமக்குக் கிடைக்கும் இந்த துன்பங்களை எதிர்த்துப் போராடி துன்பம் வேண்டாம் என்று ஒதுக்கினால் நாம் கிறிஸ்துவின் வீரர்கள் அல்ல. அந்த துன்பங்களினுடே ஆண்டவர் நம்மைத் தூய்மைப்படுத்துகின்றார். சமீபத்தில் ஒருவர் என்னைப் பார்க்க வந்தார். என்னுடன் பேசும் போது நான் நபரிடம் சொன்னேன். என் இதயம் பிளந்து போயுள்ளது. என் இதயத்திலிருந்து இரத்தம் வழிந்தோடுகின்றது. என் உள்ளாந்தரத்தினை எவரும் காண்பதில்லை. ஆனால் நான் இந்த மக்கள் மீதான என் அன்பின் காரணமாக நான் நிமிர்ந்து நிற்கிறேன் என்று பகிர்ந்த போது என்னிடமிருந்து உயிரளிக்கும் அன்பு புபுதுவிற்கு வழிந்தோடுவதை உணர்ந்தேன். நற்செய்தியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவது ஆனந்தத்தை பிறப்பிக்கும். நம்மிடையே ஒவ்வொன்றிற்காக துன்புறும் அவதிப்படும் களிமண் போன்றோர் உள்ளனர். இலஞ்சம் பெற துன்புறுபவர்கள் இலாபம் பெற துன்புறுபவர்கள் ஒவ்வொரு புகாரினை ஏற்படுத்துவோர் பலர் உள்ளனர். நான் கதைப்பது அப்படிப்பட்ட துன்புறுதல் அல்ல. இறைஅரசிற்காக துன்புறுவதனை விட்டு விலக வேண்டாம். விண்ணரசிற்காக துன்புறும் போது அங்கு இருக்கின்ற ஆனந்தம் மகிழ்ச்சி மிகப்பெரியவை.

பாருங்கள் தேவதாயினுள் இருந்த தயக்கமற்ற திடமான சுபாவம் மகன் ஒருவர் வந்து என்னிடம் கூறினார் அம்மா இம்முறை ஆவியானவரின் பெருவிழாவின் போது திடம் எனும் கொடையினை நான் கேட்க வேண்டும் என்றார். ஆம் அந்த மகன் மட்டுமல்ல நீங்களும் நானும் இன்று

ஒரு திடமான இதயத்தை நேர்மையான இதயத்தை உண்மையான இதயத்தை பொய் சொல்லும் ஒருவர் முன் திடமான நிற்கும் இதயத்தைக் கேட்போம். பொய் சொல்லும் ஒருவர் முன் பயப்பட வேண்டாம். ஆண்டவர் 365 முறை பயப்பட வேண்டாம் என்று வேதாகமத்தில் கூறியுள்ளார். அநேக நேரங்களில் நான் உங்களுடன் இருப்பதால் பயப்பட வேண்டாம் என கூறியுள்ளார். எனவே பொய் சொல்பவர்கள் பயப்பட வேண்டும். உண்மைக்காக இறப்பதற்கும் திடமாயிருங்கள். அல்லது தலை துண்டிக்கப்பட்டாலும் உண்மை கூறி இறக்க ஆயத்தமாயிருங்கள். உண்மை பொய்யாகாது. பொய் உண்மையாகாது. உண்மை இறுதியில் வெற்றி பெறும் ஆண்டவருடைய சீடர்கள் இயேசுவை எருசலேமுக்கு செல்ல வேண்டாம் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் அங்கே அவர்கள் உங்களைக் கொல்ல காத்திருக்கிறார்கள். ஆண்டவரோ அந்தக் குள்ள நரிகளிடம் போய்ச் சொல்லுங்கள் நான் இந்த ஊரில் இன்னும் போதிப்பேன் என்று பிலாத்து என்று அழைக்கப்படும் குள்ள நரிக்கு கூறுங்கள் என்றார் அவர் பயப்படவில்லை. ஏனெனில் அவர் உண்மைக்கு சாட்சியம் அளித்தார் அவர் அவர்களிடம் கூறினார் என் உடலில் கை வைக்க முடியாது. பரலோகத்திலுள்ள என் தந்தை உங்களுக்கு அதிகாரம் கொடுக்கவில்லை எனக்கூறி அவர் தைரியமாக சிலுவையைத் தழுவிடச் செல்கிறார்.

அன்பர்களே, உங்களுக்கும் எனக்கும் எழும் பிரச்சனைகளால் சோர்வடைந்து பின்வாங்கி ஓட வேண்டாம். அழ வேண்டாம் தைரியத்துடன் முகங்கொடுங்கள். அது என்னவாக இருந்தாலும் உண்மை வெற்றி கொள்ளும். அதே எனது விசுவாசம். அதற்காக நான் உறுதியாக நிற்பேன். பிறகு என்ன நடக்கும்? துன்பத்தின் இந்த

தடைகள் அனுபவம் அனைத்தும் ஒரு வெற்றிகரமான அனுபவமாக மாறும். ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக மாறிவிடும்.

பாருங்கள், முழு உலக வரலாற்றிலும் சிலுவையின் அடிவாரத்தைப் போன்ற ஒரு இருளான நேரம் இருந்ததா? என்று பாருங்கள். சிலுவையின் அடிவாரத்தில் ஆதாம் முதல் இன்று வரை மற்றும் இன்று முதல் இரண்டாம் வருகை வரை உலக வரலாற்றில் மிக எவ்வளவு உலகளவில் இருண்டதாக நற்செய்திகள் காட்டுகின்றன. சூரியன் வேறு வழியில் திரும்பியது எந்த வெளிச்சமும் கொடுக்கப்படவில்லை. ஆழமான இருள் ஆனால் இந்த இருளில் கடவுளின் தாய் ஒளியைக் கண்டார். இந்த இருளில் நாமும் ஒளியைக் காண்போம்.

நாங்கள் ஒரு பெரிய மனிதரைச் சந்தித்த போது அவர் இப்போது நீங்கள் அனுபவிக்கும் துன்பம் மறைஇரகசியமானது என்று எங்களிடம் கூறினார். நீங்கள் துன்புறும் இந்த மறைஇரகசியத்தை கடந்து விட்ட பிறகு மகிழ்ச்சியின் மறை இரகசியம் உங்களுக்கு வருகிறது. நீங்கள் மகிழ்ச்சியின் மறைஇரகசியங்களை கடந்து சென்ற பிறகு மாட்சிமை மிகு மகிமையினால் நிரம்பிய மறை இரகசியத்தை அனுபவிக்க முடியும். நாங்கள் அந்த மணி நேரத்தை எதிர்நோக்குகிறோம். இந்த மணித்தியாலம் இந்த பொன்விழாவோடு சேர்ந்து ஆண்டவர் எப்போது வேண்டுமானாலும் பரிசுகளை வழங்குகிறார். அதுவரை நாம் பொறுமையோடு ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்தவாறு பயணம் செய்வோம்.

இப்போது சிலவையடிவாரத்திற்கு சென்றோரைப் பாருங்கள். அவர்கள் இயேசுவை எவ்வளவு நேசித்தனர்? இப்போது

ஒருவர் சிலுவையடிவாரத்திற்கு சென்றோரைப் பாருங்கள் அவர்கள் இயேசுவை எவ்வளவு நேசித்தனர்? இப்போது ஒருவர் சிலுவையடிவாரத்திற்கு செல்ல முடியுமாவது அவர் இயேசுவில் அன்பு கொண்டிருந்தால் மாத்திரமேயாகும். பாருங்கள் ஒரு சிலரே சிலுவையடிவாரத்தில் இருந்தார்கள். மற்றவர்கள் பயத்தில் ஓடிவிட்டார்கள். ஆனால் அவர்கள் பெற்ற அனுபவம் உங்களிடம் யாராவது கேட்டால் பேதுருவும் யோவானும் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். சிலுவையின் அடிவாரத்தில் உள்ள அனுபவத்தை பற்றி பேச நீங்கள் யாரைத் தேர்வு செய்வீர்கள்? பேதுரு ஒழிந்து விட்டார். நாங்கள் யோவானும் அந்த அனுபவம் இருந்தால் அவரைத் தேர்வு செய்வோம். எல்லாரையும் விட நாம் தேவதாயை தேர்வு செய்வோம். தேவதாய் புதுமையான விசுவாசத்துடனே கிறிஸ்து ஆண்டவரின் ஆளுமையை சிலுவையடியில் இருந்து அனுபவித்தமையாலாகும்.

அன்பார்ந்தவர்களே, சிலுவையின் அடிவாரத்தில் இயேசு கூறிய ஒரு வார்த்தையை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். “இதோ உன் தாய் - இதோ உன் மகன்” அவர் கூறுகிறார். அவர் கூறிய இன்னுமொரு வார்த்தையை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். “எல்லாம் நிறைவேறிவிட்டது” எல்லாம் முடிந்து விட்டது. அது முடிந்து விட்டது. அது முடிந்தது. இதற்கான கிரேக்க சொல்லே டெடலெஸ்டாய் “டெடலெஸ்டாய்” என்ற கிரேக்க சொல் அக்கால யூதர்களுக்கும் இயேசுவுக்கும் மிகவும் பழக்கமானது. சாதாரணமாக யூதர்களுக்கும் இயேசுவுக்கும் மிகவும் பழக்கமானது. சாதாரணமாக “டெடலெஸ்டாய்” என்பது அடிமை தன் எஜமானிடம் சென்று எஜமானர் கொடுத்த வேலையை முடிக்காவிடில் அவர் தொலைந்து விடுவார் அல்லவா? அதை ஒரு புள்ளி

கூட அசைவுறாது செய்து முடித்த பின் “டெடலெஸ்டாய்” என்று கூறுகின்றார் தந்தையே, நான் உங்கள் வேலையை செய்து முடித்து விட்டேன். எவ்வளவு மகிழ்ச்சிகரமான அனுபவம் அதாவது அவர் ஆண்டவராகியது வெறுமனே சர்க்கரை இனிப்புக்கள் சாப்பிடுவதன் மூலமல்ல. எமது நாட்டின் தலைவர்கள் சர்க்கரை இனிப்புக்களை சாப்பிட்டே பெரியவர்கள் ஆகின்றனர். இயேசுஆண்டவர் இனிப்புக்களை சுவைத்தல்ல ஆண்டவராகியது, சிலுவையில் இறுதித்துளி இரத்தத்தையும் சிந்தியதன் மூலமே “டெடலெஸ்டாய்” என்று கூறி அவர் முழு அகிலத்தின் ஆண்டவராகினார்.

மேலும் இந்த வார்த்தையை உபயோகித்த மற்றும் வணிகர்கள் வியாரிகள் பயன்படுத்துகின்றனர். அவர்கள் மக்களிடமிருந்து பணத்தை எடுத்து பொருட்களை விற்று சரியான அளவில் பணத்தை கொடுத்த நாளில் அவருக்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படும். அங்கே “டெடலெஸ்டாய்” என அச்சிடுவார்களாகும். அதாவது வரவு செலவு ஒப்பந்தம் முடிந்துவிட்டது. அதே போன்று கடன் வாங்கி அந்த கடனை முழுமையாக கொடுத்துவிட்டு “டெடலெஸ்டாய்” என்று கூறுவார்களானால் இனி நீ ஒரு கடனாலி இல்லையென்று அதேபோன்று நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டு தண்டனை முழுமையாக முடிவுற்றால் அவர் “டெடலெஸ்டாய்” என்பராம். அதே போல் ஒரு போரில் முடிவுற்று வெற்றி பெற்றால் “டெடலெஸ்டாய்” என்பர்.

கிறிஸ்துநாதர் இந்த வார்த்தையை சிலுவையில் பயன்படுத்தி அவர் தந்தையிடம் முதலில் பிதாவே எல்லாம் நிறைவேறிற்று என்றார். எனது வேலையை செய்து முடித்துவிட்டென். இறுதியாக கூறுகிறார் எனது இரத்தத்தின் இறுதித் துளியையும் சிந்திவிட்டேன். இஙங்கே முழு அகிலத்தினதும் மீட்பிற்கு பங்களிப்பை கொடுத்து

முடித்து விட்டேன். நான் அவர்களுக்கு மீட்பின் அன்பை பெற்று கொடுத்து விட்டேன். நான் மனிதர்களின் மீட்பராக ஆனேன். நான் அவர்களுக்கு மீட்பைக் கொடுத்தேன். இது யாருக்கு எதிரான போர்? பிசாசு - உலகம் - சரீரத்துக்கு எதிராக போரில் வென்றேன். யாருக்காக இந்த உலகில் நீங்கள் அன்பு செய்கின்ற மக்களுக்காகவே. எனக்காக அல்ல அதன் பின்னர் எதிரி இல்லை. பிசாசு இன்று பல் இல்லாத சிங்கம் அது ஓடும் போது நாங்கள் சிங்கம் வருகிறது என ஓடுகின்றோம் ஆனால் அதுக்கு பற்கள் இல்லை. அதன் உருவைக் கண்டு பயந்து ஓடுகிறோம். பிசாசின் சக்தியும் பல்லில்லாத சிங்கத்தைப் போன்றது. அவர் வென்றார். வெற்றிக் கொண்டேன் நான் சிலுவையில் இதனை முடித்து விட்டேன்.

அன்பிற்குரியவர்களை இந்த ஜெபத்தில் எனக்கு இன்னுமொரு அற்புதமான வார்த்தை கிடைத்தது. இதை நான் நின்று கொண்டு சொல்ல வேண்டும் இறைஆண்டவருக்கு இருக்கின்ற கௌரவத்தினால் நான் அதை நின்று கொண்டு சொல்கிறேன். சிலுவையின் அடிவாரத்தில் இருப்பது மிகவும் முக்கியமென நான் கூறினேன். ஆகையால் சகோதரர்களே அவரது இரத்தப்பலியினால் பரிசுத்த ஸ்தலத்திற்கு உட்புகுவதற்கு எமக்கு அனுமதி உண்டு. மனிதர்களுக்கு பரிசுத்த ஸ்தலத்திற்கு உட்புக முடியாமல் போயிற்று அது பலியிட்ட குருவிற்கு மட்டுமே தூயகத்திற்குள் நுழைய முடியும். அவர் தமது சரீரம் என்னும் திரை வழியாக எமக்காக புதியதொரு வழியை எமக்கு அமைத்து கொடுத்தார். நற்செய்தியாளர்கள் திரை இரண்டாக கிழிந்தது என்கிறார்கள். எனது அம்மா எனது சிறிய பருவத்தில் திரை இரண்டாக கிழிந்து விட்டது என்று கூறுவார். எனக்கு அது விளங்கவில்லை. நான்

எந்நாலும் நினைப்பது சிலுவைக்கு பின்னால் திரை ஒன்று இருக்கின்றது. அந்த திரை இரண்டாக கிழிந்தது என்று நான் உருவ சித்திரமாக நினைத்து கொள்வேன். திரை என்பது என்ன? எபிரேயரின் நிருபத்தில் இயேசுவின் உடல் இரண்டாகப் பிரிந்தது என்கின்றனர். சிலுவையில் அவர் இறந்ததால் அவர் மூலமாக நாம் கடவுளிடம் நேரடியாகச் செல்லலாம். விண்ணகம் பூமிக்கு வந்தது. இறைவனை நாங்கள் எங்கள் அப்பா தந்தையே என்று அழைக்க முடிந்தது. கடவுளின் மகன் நாங்கள் அவரது மக்களல்ல. இயேசுவைப் பார்த்தே தந்தை கூறினார் எனது மகன் நீரே என்றார். ஆனால் இயேசுவின் சரீரம் இரண்டாகப் பிரிந்து நொறுங்குகையில் நாம் அனைவரும் கிறிஸ்துவின் மூலமாக பிதாவிடம் செல்வதற்கும் பிதாவானவரை அப்பா தந்தையே என்று அழைப்பதற்கும் தந்தை இயேசுவை நோக்கி இயேசுவை எவ்விதம் பணியாகப் பார்த்தாரோ? அப்பா தந்தை நம் அனைவரையும் பணியாகவே பார்க்கிறார்.

ஏன் அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தம் அந்த இறை மகனின் இரத்தம் இறைவனின் இரத்தம்

இறைவனின் இரத்தத்தின் மூலம் விலைமதிக்க முடியாத பாவமே அறியாத இயேசுவின் இரத்தத்தின் மூலம் அவர் மூலமாக நாம் அவருடன் விண்ணகத்திற்கு செல்ல முடியும். இறைவனை அப்பா தந்தையே என்று அழைக்க முடியாது போன மோசே அவரை நெருங்க முடியாது இறைவனை அப்பா என்று அழைக்கலாம். யூதர்கள் இயேசுவைக் கொல்வதற்கான ஒரு காரணமே, இறைவனை அப்பா தந்தையே என்று அழைத்தமையினாலாகும். ஒரு கட்டத்தில் இயேசுவிற்கு எறிய அவர்கள் கற்களை எடுத்தார்கள். அதற்கு இயேசு ஏன் நான் நல்ல காரியங்களை

செய்யும் போது நீங்கள் ஏன் என்னை நோக்கி கற்களை எடுத்து என்னைக் கொல்ல வருகிறீர்கள் என்று இயேசு அவர்களிடம் கேட்கிறார். நாங்கள் கல்லெறிவது நீங்கள் நல்லது செய்கிறீர்கள் என்பதற்காக அல்ல. ஆனால் எங்களைப் போன்ற ஒரு மனிதரான நீர் இறைவனை அப்பா என்ன சொல்வதனால் என்கின்றனர். மோசே இறைவனை நெருங்க முடியாதிருந்தார். நெருப்பு சுவாலையில் தோன்றிய இறைவனை நெருங்க முடியாதிருந்தார். நெருப்பு சுவாலையில் தோன்றிய இறைவனை எப்படி நீர் அப்பா என்றீர். இதற்காகவே கல்லால் எறிய முன் வருகின்றோம் என்றனர். இயேசு அவர்களின் தவறான கொள்கைக்கு அஞ்சாமல் இறைவனை அப்பா தந்தையே என்றழைத்தார்.

பழைய ஏற்பாட்டின் பயங்கரமான கடவுள் கிறிஸ்துவின் காரணமாக அவருடைய மரணம் அவருடைய உயிர்த்தெழுதல் அவருடைய ஆளுமையினால் நமக்கு பிதாவாகிய கடவுளிடம் செல்ல வழி திறந்தது. அப்படியானால் அன்பிற்புரியவர்களே நாம் இயேசுவை எவ்வளவு நேசிக்க வேண்டும்? இயேசுவுக்காக நம் வாழ்க்கையை எவ்வளவு கொடுக்க வேண்டும்? இந்த நாட்களில் உங்கள் அனைவருக்கும் நித்திரை இல்லை. நானும் இரவு பகல் பார்க்காமல் வெயில் மழை பார்க்காமல் உங்களுக்காக வாழ்க்கையை பலியாக்கினேன். திரையை இரண்டாக்கி திறந்த இயேசுகிறிஸ்து ஆண்டவருக்காகவே.

ஆகையால், அன்பிற்குரியவர்களே! நாம் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இறைஅரசின் சாட்சிகளாவோம். இதை செய் இதை செய் என்று பலமுறை சொல்ல வேண்டும். செய்து முடித்துவிட்டதா என்று கேட்டால் இன்னுமில்லை இன்னுமில்லை ஒவ்வொருநாளும் இல்லை. இறைதந்தை இயேசுவுக்கு அவ்வாறு சொல்ல வில்லை.

செய்து முடித்து விட்டேன். அவர் வழியாக எமக்கு விண்ணரசை காண முடியும் இறை தந்தை எம் மத்திக்கு வந்தருள்வார்.

பேதுருவின் பிரசங்கம் மேல்மாடி அறையிலிருந்து வெளிவந்து முதலில் வெளிப்படுத்தியது இயேசு கிறிஸ்தவே ஆண்டவர் என்பதையாகும். கோழை உள்ளம் கொண்டவர் ஒரு துணிவுள்ளவராக மாறிவிட்டார். புபுதுவ மக்கள் அனைவரும் இன்று துணிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏன் துணிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்? இயேசுகிறிஸ்து ஆண்டவர் எனக் கூறுவதற்கே. மற்ற திருட்டு வேலைகளுக்காகவல்ல அவரே எம் வாழ்வின் ஆண்டவர் என்று சொல்ல பயப்பட வேண்டாம். அது தான் உண்மை. பவுல் அச்சமின்றி தேவனுடைய ராஜ்யத்தைப் பிரசங்கித்து கர்த்தராகிய இயேசுவைப் பற்றி போதித்தார்.

புபுதுவவினுள் கடவுள் கடந்த காலங்களில் நமக்காக பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். இதைப் பற்றி நாம் தற்பெருமை கொள்ளவல்ல நாம் பொன்விழாவை கொண்டாடும் இந்த உன்னத நாளில் நாம் தாழ்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் நமது பாவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். 50 ஆண்டுகளாக கிதுதன புபுதுவ மக்கள் மத்தியில் யார் வழியாகவாயிலும் தவறு நிகழ்ந்திருந்தால் அதற்காக நாங்கள் ஆண்டவரிடம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மன்னிப்பைக் கேட்பது மட்டுமல்ல நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் கிதுதன புபுதுவ ஊடாக இத்தகைய தவறுகள் நிகழ்ந்துள்ளன என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். இறை அன்பை ஆழமாக அனுபவிக்க முடியும் தமது தவறை ஏற்றுக் கொள்ளுகின்ற ஒருவரூடாகவே ஆகும். ஆகையால் நாம் இன்றைய நாளில் இந்த வருடம் பூராவும்

நாம் விழிப்புறுவோம் இந்த 50 ஆண்டுகளில் கடவுள் நம் மத்தியில் அற்புதமான காரியங்களை செய்திருக்கிறார். நாம் தாழ்மையுள்ளவர்களாக வேண்டும். பாருங்கள் சுவாமி அப்பா இருக்கின்ற குடிசையில் யாருக்கு இருக்க முடியும். நான் இறக்கும் வரை எந்த குருவானவர்களும் இப்படிப்பட்ட குடிசையில் இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. சுவாமி அப்பாவிற்கு இந்தத் தரிசனம் இந்த நோக்கு இந்த கெரிஸ்மா இறை தந்தைக்கு வழங்கியதால் அவர் அதற்கு எதிராக செல்லவில்லை. அதைப் பார்த்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது எங்கள் எளிய சரள வாழ்க்கை எங்கள் எளிய திருமணம் இவை அனைத்தும் படிப்பினைகளின் படி சமூகத்தை பாதுகாக்கும் மீட்கும் நோக்கில் நாம் தூதுரைப்பணியை ஆற்றிட வேண்டும்.

அதே போன்று இயற்கைக்கு கிறிஸ்து ஆண்டவராக இருக்கும்போது மறந்து போக வேண்டாம் ஆண்டவர் இயற்கைக்கும் ஆண்டவர் என்பதனை. எனவே மரங்களை வெட்வோ விற்கவோ எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. அதை எதிர்த்து நிற்க விரும்பினால் அதற்கு எதிராக எழுந்து நிற்போம்.

மிகவும் சிறப்பானது மன்னிப்பு கேட்பது மட்டுமல்ல மன்னிப்பை கொடுக்க நாம் ஆயத்தமாக வேண்டும். குறிப்பாக இந்த ஜூபிலி ஆண்டில் இந்த இரண்டு இருள் சூழ்ந்திருந்த இரு ஆண்டுகளில் நாம் அனுபவித்த துயரங்களில் நம்மை தனிமைப்படுத்திய எங்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்களை நேரிய உள்ளத்துடன் மன்னிக்க வேண்டும். சிலர் அதை பேஸ்புக்கில் வைத்தார்கள். டெல்றின் அப்பாவையும் என்னையும் பணம் விரும்பினால் பணம் எடுத்துக் கொண்டு இந்தப் புகழ்ச்சி ஆச்சிரமத்தை எமக்கு கொடுத்து விடுங்கள்

எனப் போட்டிருந்தார்கள். நாம் அவர்களை மன்னிக்க வேண்டும். எம்மை வெட்கப்படுத்தினார்கள். பரவாயில்லை. உண்மைதான் உண்மை சத்தியத்திற்கு எதிராக யாரும் போராடவும் வெல்லவும் முடியாது. அதனால்தான் நாங்கள் அவர்களை மன்னிக்க வேண்டும் என்று நான் உங்களுக்கு உண்மையாக சொல்கிறேன்.

இந்த நாட்களில் பங்குகளில் உள்ளோர் சிக்கல்களுக்கு முகங்கொடுத்து நம்மை நோக்கி ஓடி வருகிறார்கள். பரவாயில்லை. மன்னியுங்கள் பொறுமையாக இருப்போம். மன்னிப்போம். துக்கத்தின் மறைஇரகசியம் மகிழ்ச்சியின் மறைஇரகசியம் மகிமையின் மறைஇரகசியம் அவை மூன்றையும் ஆண்டவரின் கணத்தில் அவர் பெற்றுத் தருவார். எனவே மன்னிக்கவும் மன்னிப்பு கேட்கவும் சொல்கிறேன். நாங்கள் கர்தினாலுக்கு அனுப்பிய கடிதம் அவருக்கு ஆழமான தாக்கத்தை கொடுத்தது. நாங்கள் அவரிடம் மன்னிப்பு கேட்கிறோம். நான் அவருடன் உட்கார்ந்து சொல்ல விரும்புகிறேன். ஒரு கணம் அவர் எங்களிடமிருந்து விலகி விட்டார். அவர்களுடைய வருத்தத்தையும் அவர்களின் உதவியற்ற தன்மையையும் சொல்ல யாரும் இல்லை. பரவாயில்லை. நாங்கள் அவரிடம் மன்னிப்பு கேட்கிறோம். நாம் செய்த தவறுகளுக்கு மன்னிப்பு கேட்கிறோம். இந்த நாட்களில் நிறைய பேர் தவறு செய்கிறார்கள் அவர்களை மன்னிப்போம். நாங்கள் செல்லும் பயணத்தில் எங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் கணவன் மனைவி ஏழைகளையும் மறந்து விடாதீர்கள். ஒவ்வொரு வணிகத்திற்கும் ஒரு கெரிஸ்மா உள்ளது. அன்னை திரேசா ஏழைகளை நேசித்த விதம் மாறுபட்டது. நான் எண்ணவில்லை அப்படி ஏழைகளை எமக்கு அன்பு செய்ய முடியும் என்று நாற்றம் வீசுகின்ற புண்களை கழுவி தூய்மையாக்கி

அவர்களை சுத்தப்படுத்தி அவர்களை அரவணைத்து உணவு கொடுத்து விசுவாச படிகளை எடுத்து அவ்வாறு எங்கள் பயணத்தின் போது ஏழைகளுக்கு ஒரு ஏழை மனிதனாக இருக்கும் படி இறைவனே சொன்னார். பிசாசு உலகம் மாமிசம் பணக்காரர்களாக வாழ எத்தனிக்கும் போது நாங்கள் ஏழைகளுக்காக ஏழைகள் ஆவோம். அதை மறக்க வேண்டாம் திருத்தந்தை பிரான்சிஸ் திருத்தந்தையாக பதவியேற்ற நாளில் அவருக்கான வாக்குகள் அதிகரித்துகொண்டு இருக்கும் போது அவருக்கு அருகில் ஒரு ஓய்வுபெற்ற ஆயர் இருந்தாராம். அவருக்கு வாக்குகள் இல்லையாம். அவர் திருத்தந்தையை பார்த்து கூறினாராம் நீர் திருத்தந்தையாகிய பின்னர் பேழையை மறந்திட வேண்டாம் என்று இறை வத்திக்கான் இருப்பதை தான் கூறுகின்றேன். பொய்யானவைகள் அல்ல. அவர் திருத்தந்தையான போது அவரிடம் வந்து அவரது பெயராக எதை தேர்ந்தெடுக்க போகிறீர்கள் என்று கேட்டார்களாம். திருந்தந்தை பிரான்சிஸ் என்று கூறினாராம். அப்போது அதை எழுத வந்தவர் பிரான்சிஸ் சேவியரா என்று கேட்டாராம். அப்போது திருத்தந்தை இல்லை பிரான்சிஸ் அசிசி என்று ஏழை மனிதன் என்று கூறினாராம். அவர் திருத்தந்தையாக பதவியேற்ற பின்பு பொருளாதார பகுதியில் இறப்பவர்களுக்கு கூறினாராம் ஏன் நீங்கள் பணத்தை வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் அதை கொண்டு போய் ஏழைகளுக்கு கொடுங்கள் என்று கூறினாராம். அவர்கள் கேட்பதற்கு முன்பு அப்பணத்தை அவர்களுக்கு கொடுங்கள் என்று கூறினாராம் திருத்தந்தை.

பிரான்சிஸ் ஏழைகளை நேசித்தார். நாங்களும் ஏழைகளுக்காக ஏழைகளாவோம்.

நாம் செபிப்போம் நாங்கள் எழுந்து நிற்போம். நம்முடைய ஜூபிலி ஆண்டை ஒரு புனித ஆண்டாக மாற்றி தருமாறு கூறுவோம். இந்த ஜூபிலி ஆண்டு கிறிஸ்துவை நன்கு நோக்குகின்ற வருடமாகவும் எமது கெரிஸ்மாவின் அனுபவமான தேவதாயின் வெறுமையாகுதல் இரண்டாவது அனுபவம் கிறிஸ்துவின் புத்திரத்தன்மையை நோக்குதல் மூன்றாவது அனுபவம் எமது புத்திரத்தன்மை நான்காவது மறைஇரகசியமான இறைவன் முன்னிலையில் தோன்றியிருத்தல் அவ்வாறு சிலுவையின் அடிவாரத்தில் தேவ தாய் இருந்தார். அப்படி இல்லையா? அந்த பெரிய நெருப்பின் நடுவே “இதோ உமது மகன் இதோ உன் அம்மா” எப்படி தேவதாயார் இருந்து இருப்பார். அந்த அமைதியினுள் தான் தேவதாயார் கண்டார். நீரே எனது ஆண்டவர் என நீர் சரி நீர் சரி இக்கணம் தொடக்கம் நீரே ஆண்டவர் நான் இப்பொழுது முழு அகிலத்திற்கும் தாயானவர் இயேசுக்கிறிஸ்து ஆண்டவர் என்று தேவ தாய் இயேசுவிடம் கூறியிருப்பார். நாமும் இயேசுவோடு இருப்போம். அதிகமாக இருப்போம். சிலுவையின் அடிவாரத்தில் இருந்தவர்களின் அனுபவத்தைப் பார்ப்போம் 50 ஆண்டுகளாக நாம் பெற்ற போதனைகள் அதே போன்று இந்த ஜெபத்திற்கு நான் தயாராகும் போது எனக்குள் இருந்து வந்த ஒலி அப்போஸ்தலரது விசுவாச அறிக்கையில் உள்ள புனித கத்தோலிக்க திருச்சபையை நான் நம்புகிறேன் என்பதை மறந்து விடாதீர்கள் நாங்கள் கத்தோலிக்கர்கள் பெந்தகோஸ்து செல்லும்படி யாருக்கும் யாரும் சொல்ல முடியாது. உள்ளத்தில் உள்ளதை இப்போது அகற்ற வேண்டும். கத்தோலிக்க திருச்சபையை மிகவும் நேசிக்கும் புபுது மக்கள் பெந்தகோஸ்து தேவாலயத்திற்கு செல்ல வேண்டும் என்று யார் சொல்ல முடியும் அது பாவகரமானது நாம் கத்தோலிக்கர்கள்

நாம் கடவுளின் தாயை மிகவும் நேசிக்கிறோம். நாம் அருட்சாதனங்களை மிகவும் விரும்புகிறோம். நாங்கள் திருச்சபைக்கு எதிரானவர்களா? நாங்கள் ஒருபோதும் திருச்சபைக்கு எதிராக சிந்தனையில் கூட செல்லவில்லை. போவதில்லை. உள்மனதால் கூட நாங்கள் திருச்சபைக்கு எதிராக செல்லவில்லை. போகவும் மாட்டோம். இந்த வரப்பிரசாதம் நிறைந்த உன்னத நாளில் இந்தப் புபுதுவை ஆசீர்வாதங்களினால் நிரப்பி புபுது மக்கள் அனைவருக்கும் பொழிந்தருளுமாறு வேண்டி செபிப்போம்.

மகிழ்ச்சி நிறைந்த பிரிய வரப்பிரசாதத்தினால் ....

**இயேசு துணை!**

**இனிய மங்கள யூபிலி மகோற்சவ வாழ்த்துக்கள் !!!**

## “இயேசு கிறிஸ்துவே ஆண்டவர்”

தூய ஆவியானவர் திருவருகை

புபுது யூபிலி மங்கள மகா உற்சவம் - 2021

இருள் தனை சிதறடித்து -
உலகை ஒளிர்வித்த சூரிய பகவானே
ஆவியின் பெலத்தால் எமது வாழ்வை -
மலர்வித்த திரு வார்த்தையானவரே
இறை மகிமைமிகு சுடரே -
இறை அன்பின் சாயலானவரே
பிதாவோடு எமை இணைத்த -
உன்னத சதாகால குருவானவரே

உம் திருமுன் நாம் கூறுவோம் உறுதியாய்
இயேசு கிறிஸ்து நீரே - எமது ஆண்டவரே
சதாகாலத்தின் சதா காலமும் - எம் அரசர் நீரே
ஓசான்னா ஓசான்னா - எம் அரசர் நீரே

1

அப்பா தந்தாய் என பிதாவை அழைத்திட -
உரிமை தந்த புத்திரனே
உம்மை தொடர எம்மை அழைத்து -
சிலுவை பயணம் சென்ற கிறிஸ்துநாதா
தடை துன்பம் சோதனை வந்தாலும் -
திடமாகவே நாம் சென்றிடவே
ஆவியின் தீயினால் எமை மூட்டி -
அரசிற்காக அனுப்புமே

உம் திருமுன் நாம் .....

2

மரணத்தை வென்ற ஆண்டவரிடம்
வாழ்வின் உரிமையை கையளிப்போம்
என்றும் நாம் மனம் வருந்தி -
விருப்பினை தருவோம் இறக்கும் வரை
சங்கம வாழ்விற்கு சாட்சி பகர்வோம் -
சுய நல பலத்தை நொறுக்கி
அரசிற்கான மக்கள் நாமே -
விழிப்புற்றெழுவோம் உண்மையை வென்றே
உம் திருமுன் நாம் .....

3

ஐம்பது வருடம் நிறை தூய பயணத்தில்
ஆண்டவர் ஆற்றிய மாபெரும் செயலை
புகழ்வோம் தேவ தாய் உடனே
ஜூபிலி வருடமதில் புதிய பயணத்தை தொடங்கியே

# யூபிலி சஞ்சிகை வெளியிடும் நிகழ்வு

இந்த மங்கள இரவினில் நாம் ஆயத்தமாவது, இன்னுமொரு விசேசமான நிகழ்ச்சியை நிகழ்த்துவதற்காகும். அன்று முதல் இன்று வரை கிது தன புபுதுவ திரு அவையின் உயிருள்ள சம்பிரதாயங்களுக்கு கௌரவமளித்து பேணிப் பாதுகாத்தது.அவற்றின் சத்தியங்களை ஏற்று வருகை தந்த நினைவுகளை நோக்கும் இத்தருணத்தில், பலவேளைகளில் தூய ஆவியானவரின் ஒளியினால் வழிநடத்தப் பெற்ற சந்தர்ப்பங்களை நோக்கிப் பார்க்கையில், இப்பயணமானது மேல் நோக்கி நிச்சலிட்டதைப் போலாகும். இது புரட்சியும் சவால் மிகுந்ததாகவும் அமைந்தது. அதுமாத்திரமல்ல, இவை புறக்கணிப்பு எதிர்ப்பு போன்றவற்றின் அடையாளமாகியது. மாபெரும் எழில் கொண்ட காலகட்ட அனுபவமாகியது.

சில வேளைகளில் உங்களுக்கு நினைவில் எழக்கூடும் திருத் தூதர் பணியில் ஆரம்ப சங்கத்தவர்களது வாழ்வின் அனுபவங்களை இலங்கைத் தீவில் வாழுகின்ற கிது தன புபுதுவ மக்களை ஆவியானவர் வழிநடத்திய விதத்தினை நாமும் ஸ்பரிசிதத விதம். இளைஞர், மகளீர் முன் வந்த புரட்சிகரமான மாற்றங்கள். இவை எம் நாட்டைப் பற்றிப் பரவிச் சென்றன.

தாய், தந்தையர், இளைஞர், மகளீர், மாணவ, மாணவிகள், சிறுவர் பகுதிகளும், சுபெந்தி - சுரந்தி, சுமெதி பிரிவுகளும் ஆவியானவரின் இயக்குதலினால் விரிவடைந்து சென்று, இலங்கையில் மாத்திரமல்ல வெளியூர்களில் வாழச் சென்ற இடங்களில் எல்லாம் இந்த அற்புதமான வாழ்க்கை முறையை இத்தாலி,

அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, டுபாய், இஸ்ராயேல், அது போன்றே மற்றய இடங்களிலும், ஆவியானவரினால் மூட்டப் பெற்ற வாழ்க்கை அனுபவம் பற்றிப் பரவிச் சென்றதும் புரட்சியை ஏற்படுத்திதும் ஆசியாவின் முத்தாகிய தேசத்தின் ஊடாகவாகும்.

இப்பயணத்தின் வழி செல்கையில் பீடனைகள் பலவற்றிற்கு முகங்கொடுத்தவர்களது வாழ்வு பலவாயின. இவை அனைத்தையும் நோக்கிய எமது அப்பாமார், அம்மாமார், இளைஞர், மகளீர் இந்த வரலாற்றுக்களை எழுத்தில் வடித்தார்கள். இந்த எழுத்தெட்டினை ஐம்பதாம் வருட யூபிலி மங்கள மகோற்சவ நாளில், இந்நூலினை வெளியிடுவதற்காக கிது தன புபுதுவ ரெலி குழுவின் பொறுப்பாளராகிய மாறி திசாநாயக்க அம்மா அவர்களே! உங்கள் கரத்தினால் இந்நூலினை இறைவாக்கினர் குழுவினருக்கு கையளிப்பதற்காக அன்புடன் அழைக்கின்றோம்.

இறைவாக்கினர் குழுவின் றஞ்சனா கவிரத்ன அம்மா அவர்களே! டெல்றின் வணிகரத்ன அப்பா அவர்களே! நான் உங்கள் இருவரையும் ஆண்டவரின் பெயரால் அன்புடன் அழைக்கின்றேன். ஆம்! நீங்கள் இதனுடாகக் காண்பது, ஆனந்தமிகு கணத்தில் ஆவியானவரின் அருளாற்றலின் அன்பு செயற்பாட்டினை இந்நூல் வழியாக புபுதுவிற்காக திருச்சபைக்கு உவந்தளிக்கும் நிகழ்வினையே ஆகும்.

# ஒளியின் வழிபாடு

அன்பார்ந்தவர்களே,

எமது 50வது பொன்விழாவின் மங்கள மகோற்சவத்தின் வல்லமையான கணத்திற்கு இப்போது நாம் வந்துள்ளோம். கிது தன புபுதுவ பரிசுத்த ஆவியானவரின் செயற்பாட்டின் பிரதிபலனாகும். அதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம், விசுவசிக்கின்றோம். 50 வருடங்களுக்கு முன்பு சுவாமி அப்பா அனைத்து புபுதுவ தலைமைத்துவம், முழு புபுதுவ மக்களது வீழ்ச்சிகள், எழுச்சிகள் போராட்டங்கள், சவால்கள், தடைகள் மத்தியில் வந்த இப் பயணத்தில் **'பரிசுத்த ஆவியானவர் வந்தவுடன் நீங்கள் வல்லமை பெறுவீர்கள்'** என்பது இறைவனுடைய வல்லமையான வாாத்தையின் சாட்சியம் அல்லவா?

அது அவ்வாறெனில், இந்த இரவு வல்லமையான இறை தந்தையின், மகனானவரின், ஆவியானவராகிய பரிசுத்த ஆவியானவருக்கு நாம் வந்தனையை நமஸ்காரத்தை செய்கின்ற இரவு அல்லவா? ஆகையால் அன்பார்ந்தவர்களே இவ் 50 வருடம் முழுவதும் முழு புபுது மக்கள் இன்று வாழ்கின்ற, எம்முடன் வாழ்ந்து இன்று விண்ணகத்தில் வீற்றிருக்கின்ற புபுது அம்மாமார், அப்பாமார், அக்காமார், அண்ணாமார், தம்பிமார், தங்கைமார் நாம் அனைவரும் இந்த 50 வருட முழுவதும் ஆவியானவர் எமக்கு தந்த வரங்கள் கொடைகள் வரப்பிரசாதங்கள், ஆசீர்வாதங்களை நாம் எவ்வளவு அனுபவித்துள்ளோம். அவ் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான செயலினால் அல்லவா? ஆகையால் அன்பார்ந்தவாகளே, நாம் இந்த இரவில் ஆவியானவரைப் புகழ்ந்து, வணங்கி நமஸ்காரத்தை செய்ய வேண்டிய இரவாகும். ஆகையால் இப்போது நாம் ஆயத்தமாகி இருப்பது புபுது நடன குழுவுடன் இணைந்து நமோ நமோ தூய ஆவியானவரே, ஜய துதி மங்களம் வல்லமை உடையோரே என்று பாடியவாறு நாம், இந்த 50

வருடங்கள் முழுவதும் வல்லமையாக வழிநடத்தி வந்த பரிசுத்த ஆவியானவருக்கு நடனத்துடன் வந்தனையை நமஸ்காரத்தை செலுத்துவோம். நாம் அதில் பங்கு கொள்வோம்.

நமோ நமோ தூய ஆவியானவரே....

50 வருட பயணத்திற்காக பரிசுத்த ஆவியானவரை நமஸ்கரிக்கும் இந்த இரவில் மங்கள யூபிலி மகோற்சவத்துடன் நாம் ஆரம்பிக்கின்ற புதிய சகாப்தத்தின் பரிசுத்த ஆவியானவரது பொழிவிற்காக நாம் செபிப்போம்.

அன்புள்ள அம்மா அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கையே! இந்த இரவிற்காக நாம் நான்கு வருடங்களாக மனம் வருந்தினோம். நாம் உண்மையாக மனம் வருந்தி சிலுவையடி வாரத்திற்கு பயணம் செய்யும் போது இறை ஆண்டவர் எம்மை அவர் சிந்திய திரு குருதியின் தூ ய்மையை நானும் நீங்களும் அனுபவித்தோம். அந்த மீட்பை அனுபவித்தோம். உரிமையாக்கிக் கொண்டோம். மீட்பிற்கு உளம் திறந்தோம். ஆகையால் முதலில் இந்த நான்கு வருடங்கள் பூராகவும் மனம்வருந்துதல் வழியாக இறை ஆண்டவர் உங்களுக்கும் எனக்கும் கொடுத்த மீட்பிற்காக நன்றி கூறுவோம்.

## சிறு புகழ்ச்சி

அன்று தொடக்கம் இன்று வரை நாம் வந்த பயணத்தினுள் எமக்காக எம்மோடு இருந்த எமது தேவ அம்மா அன்று சிலுவையடிவாரத்தில் இயேசு ஆண்டவர் எமக்கு பரிசாக அளித்த “இதோ உன் அம்மா” பேறுபெற்ற அன்னை அன்று சிலுவையடிவாரத்தில் இருந்தவாறு எம்மை ஏற்றுக்கொண்டார். இயேசு ஆண்டவர் எம்மை அவரிடம் ஒப்படைத்தார். அவர் மேல்மாடி அறையில் சீடர்களுடன் இருந்தவாறு ஆவியானவரின் பொழிவை வேண்டி பரிசுத்த திருச்சபைக்காக செபித்தார். ஆகையால் அன்பார்ந்தவர்களே, நாம் இந்த கணத்தில் பேறுபெற்ற

அன்னையை அன்புடன் கௌரவத்துடன் நினைவு கூறுவோம்.

எமது கெரிஸ்மாவின் முதலாவது அனுபவம் ஷபேறுபெற்ற அன்னையை போல் ஆகுவது’ ஆகையால் நாம் இந்த இரவில் மங்கள யூபிலி மகோற்சவத்துடன் நீங்களும் நானும் பெறப் போகின்ற புதிய பெந்தகொஸ்து திருப்பொழிவினை முழு புபுது மக்களும் பெறுமாறு, நாம் எமது கரங்களை கூப்பியவாறு மூன்று முறை அச் செபத்தை சொல்லுவோம்.

மகிழ்ச்சி நிறைந்த பிரிய வரப்பிரசாதத்தினாலே...

அன்பார்ந்தவர்களே!

இந்த இரவில் இயேசு ஆண்டவர் எமக்கு வல்லமையான வாக்குறுதி ஒன்றை தருகின்றார். ஆவியானவரின் பொழிவிற்காக செபிக்கும் இந்த இரவில் ஆண்டவர் எமக்கு புனித யோவான் நற்செய்தியின் 14 : 12-13 “நாம் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார். ஏன் அவற்றைவிடப் பெரியவற்றையும் செய்வார். ஏனெனில் நான் தந்தையிடம் போகிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். இவ்வாறு தந்தை மகன் வழியாய் மாட்சி பெறுவார். நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன்.” அவர் எமக்கு வாக்குறுதி ஒன்றை தருகின்றார். என்மீது நம்பிக்கை கொள்பவன் நான் செய்யும் செயலை செய்வான். நான் தந்தையுடன் இருக்கின்றபடியால் உங்களால் அதைவிட மேலானவற்றை செய்வதற்கு முடியும்.

புனித யோவான் நற்செய்தி 7அதிகாரம் 37-38

**‘திருவிழாவின் இறுதியான பெருநாளில், இயேசு எழுந்து நின்று உரத்த குரலில் யாரெனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும். என்னிடம் நம்பிக்கை**

**கொள்வோர் பருகட்டும் மறைநூல் கூறுவது போல் அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடும் என்றார்.'**

இங்கு ஆண்டவர் கூறுகின்றார். என் மீது நம்பிக்கை கொள்பவன் வழியாக, வாழ்வு தரும் தண்ணீர் வழிந்தோடும் என்கிறார். அன்பார்ந்தவர்களே! கிறிஸ்து நாதர் மீது நம்பிக்கை கொள்பவன், கிறிஸ்து நாதரை அனுபவிக்கின்றவன் வழியாக பெரிய செயல்களை வல்லமைமிக்க செயல்களை ஆண்டவர் செய்வார். ஆண்டவரை விசுவசிப்பவன் வழியாக, விசுவசிக்கும் மக்கள் வழியாக வழிந்தோடுகின்ற ஜீவ தண்ணீரினால் அற்புதங்களை அனுபவிப்பார்கள். ஆகையால் இக்கணத்தில் ஆண்டவர் எமக்கு ஞாபகப்படுத்துகின்றார் நீங்கள் என்னில் நம்பிக்கை கொள்ளும் அளவிற்கு என்னூடாக வழிந்தோடுகின்ற ஜீவ தண்ணீரை உங்களால் அனுபவிக்க முடியும். ஆகையால் 50 வருடத்தை நினைவுகூரும் இந்த வல்லமையான இரவில் அன்பார்ந்தவர்களே! நாம் ஆழமான விசுவாசத்துடன் செபிப்பதற்கு ஆயத்தமாகுவோம். இயேசு ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்பவர் வழியாக ஜீவ தண்ணீரைப் பருகும் தாகம் பெருக்கெடுக்கும். ஆகவே ஜீவனுள்ள ஊற்றிலிருந்து பருகுவதற்கு எம்முள் ஆழமான தாகத்தை இந்த இரவில் ஏற்படுத்துமாறு கூறுங்கள். இக் கணத்தில் எனக்கு ஞாபகம் வருகின்றது எசேக்கியேல் இறைவாக்கினர் கூறுகின்றார் கோவிலினின் வாயிற்படியின் கீழிருந்து கிழக்கு நோக்கி தண்ணீர் வருவதைக் கண்டேன் என்றார். திருவெளிப்பாட்டில் அருளப்பர் கூறுகின்றார் வாழ்வு அளிக்கும் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த, ஓர் ஆற்றை எனக்கு காட்டினார். அது பலிங்கு போல் ஒளிர்ந்தது. அது கடவுளும் ஆட்டுகுட்டியும் வீற்றிருந்த அரியணையிலிருந்து புறப்பட்டு வருகின்ற ஜீவ தண்ணீர் உள்ள கங்கையாகும். ஆகையால் அன்பார்ந்தவர்களே, புதிய ஏற்பாட்டின் புதிய கோவில் உயிர்த்த ஜீவனுள்ள

இயேசு கிறிஸ்து நாதரே ஆவார். அவரது உயிர்த்த சரீரம் மகிமைமிகு சரீரமாகும்.

அவரது சரீரத்தின் வழியாக வழிந்தோடுகின்ற அந்த ஜீவ கங்கை பரிசுத்த ஆவியானவரே ஆவார். அச் சரீரத்தினால் வழிந்தோடுகின்ற ஜீவ கங்கையின் ஊற்றானது, அன்று சிலுவையில் துளைக்கப்பட்ட அவரது விலாவாகும். ஆகையால் நாம் இந்த இரவில் துளைத்த அவரது விலாவினின்று வழிந்தோடுகின்ற ஜீவ கங்கைக்கு உளம் திறந்தவாறு, ஆவியானவரின் திருமுழுக்கு பெறுவதற்கு புதிய பெந்தகொஸ்தேயை பெறுவதற்கு ஒரு கணம் அமைதியாக நாம் எமது கண்களை மூடிக்கொண்டு ஆயத்தமாகுவோம்.

உயிர்த்த ஆண்டவர் வழியாக அம் மகா ஜீவ கங்கை வழிந்தோட போகின்றது. இந்த இரவில் ஜீவ கங்கைலிருந்து பருகுவதற்கு நாம் ஆயத்தமாவோம். ஆகவே நாம் இந்த கணத்தில் ஆயத்தமாகுவது, அவ் வல்லமையான அனுபவித்திற்கு உள்ளாகுவதற்கேயாகும். ஆகையால் நாம் அனைத்து மின் விளக்குகளையும் அணைத்து விட்டு, உயிர்த்த ஆண்டவரை இந்த இரவில் அனுபவிக்க போகின்றோம். உயிர்த்த ஆண்டவருக்கு அடையாளமாக நாம் பாஸ்கா மெழுகுவர்த்தியை ஏற்றப் போகின்றோம். ஆகையால் நாம் இந்த கணத்தில் உங்களுடைய இல்லங்களில் இருக்கின்ற அனைத்து மின் விளக்குகளை அணைத்தவிட்டு நாம் பாஸ்கா மெழுகுவர்த்தியை ஏற்றும் போது, நீங்கள் உங்களுடைய வீட்டில் உள்ள விளக்கை ஏற்றுங்கள். நாம் எமது விளக்குகளை ஏற்றியவாறு, எமது கவனத்தை எசேக்கியேல் இறைவாக்கினர் கூறும் புதிய கோவில் பக்கம் திருப்புவோம். அக் கோவில் உயிர்த்த இயேசு கிறிஸ்து நாதர் ஆகையால் உயிர்த்த இயேசு ஆண்டவரை அடையாளமாக்கிக் கொண்டு இக் கணத்தில் பாஸ்கா மெழுகுவத்தியை ஏற்றுமாறு மிகவும் அன்புடனும்

கௌரவத்துடனும் அருட் தந்தை அலெக்ஸ் நிலந்த அடிகளாரை அழைக்கின்றேன்.

நீங்களும் உங்களுடைய இல்லங்களில் அக் கணத்தில் விளக்கை ஏற்றுங்கள்.

உயிர்த்த இயேசு ஆண்டவரை எமக்கு அளிக்கும் ஆவியானவரின் அந்த ஒளியினால் முழு புபுதுவ மக்கள் மீதும், முழு திருச்சபைக்கும் எமது தேசத்திற்கும் எடுத்து செல்வதற்கு எமக்கு இருக்கின்ற அம் மகா அழைப்பு அப் பயணத்திற்கு தலைமைத்துவம் கொடுப்பதற்கு இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்ற கிது தன புபுதுவவின் தேசிய இறைவாக்கின குழுவிற்கு இக் கணத்தில் நான் அன்புடன் அழைக்கின்றேன் பாஸ்கா மெழுகுவத்தினூடாக இறை ஆண்டவரின் ஒளியை பெற்றுக் கொண்டு குத்து விளக்கை ஏற்றுமாறு. குத்துவிளக்கை ஏற்றி இத் தேசத்திற்கு திருச்சபைக்கு இறை ஆண்டவரின் ஒளியை எடுத்து செல்வதற்கு எமக்கு இருக்கின்ற அழைப்பிற்கு அம் மக்களுக்கு ஒளியை எடுத்து செல்வதற்கு தலமைத்துவத்தை எடுக்குமாறு நான் இக் கணத்தில் தேசிய இறைவாக்கின குழுவிற்கு அழைப்பு விடுக்கின்றேன்.

## குத்து விளக்கை ஏற்றல்

பாவத்தின் விசத்தை ஒளித்த, உலகத்தின் இருளை அகற்றிய இயேசு கிறிஸ்துநாதர் எமது ஆண்டவர். அவர் வழியாக வழிந்தோடுகின்ற வாழ்வு தரும் கங்கை பரிசுத்த ஆவியானவர் ஆவார். புபுது மக்களே, வீடுகளில் இருந்து உங்கள் கரங்களை உயர்த்துங்கள். இவ் இரவில் கிறிஸ்துநாதரிடம் உங்கள் இதயங்களை உயர்த்துங்கள். கிறிஸ்து நாதரிடம் உளம்திறவுங்கள். உயிருள்ள கிறிஸ்து நாதரிடம் உங்களை கையளியுங்கள். இந்த இரவு உயிரளிக்கும், வாழ்வு தரும், கங்கை வழிதோடி வருகின்ற கணமாகும். மறுமலர்ச்சி அடைந்த அப்பாவாக,

அம்மாவாக, மகன் மகள் என்ற வகையில். சுபெந்தி சகோதரனாக சகோதரியாக, சுரெந்தி அக்காவாக சபெந்தி சங்கத்தின் அம்மாவாக அப்பாவாக மகன் மகளாக, குருத்துவ வாழ்விற்கு அழைப்பு பெற்ற ஒருவர் என்ற வகையில் இந்த இரவில் உயிர்த்த கிறிஸ்துநாதருக்கு உளம் திறந்து செபிப்போம். இறை தந்தையானவரிடமிருந்தும் மகனானவரிடமிருந்தும் வழிந்து வருகின்ற அவ் வாழ்வு தரும் கங்கையில் மூழ்கி பருகுவோம். நாம் அவரிடமிருந்து பருகி எமது வாழ்வை ஒளிமயமாக்கிக் கொள்வோம். புத்தெழுச்சி பெறச் செய்வோம். ஆகையால் இறை அண்டவரை நமஸ்கரிக்கும் இப் பாடலுடன் நாம் சிறிது நேரம் உயிர்த்த கிறிஸ்துநாதரை நமஸ்காரம் செய்தவாறு செபிப்போம். ஆண்டவரே நீர் இறை தந்தையானவரிடமிருந்தும் பரிசுத்த ஆவியானவரிடமிருந்தும் வழிந்தோடுகின்ற வாழ்வு தரும் கங்கைக்கு உளம்திறப்பதற்கு எமது மனதை தெளிவுப்படுத்தியருளும். எமது உள்ளாந்திரத்தை திறந்தருளும். மனதை திறந்தருளும். புபுது மக்களை புதிய பயணத்திற்கு இப் பொன்விழாவுடன் புதிய பயணத்திற்கு அபிஷேகம் செய்தருளுமாறு நாம் இக்கணத்தில் இப்பாடலுடன் உயிர்த்த ஆண்டவரை நமஸ்காரம் செய்தவாறு செபிப்பதற்கு ஆயத்தமாகுவோம்.

ஆண்டவர் ஆண்டவர் அவர் மரித்தோரில் உயிர்த்தெழுந்தார் .... (புபுது பாடல் இல. 123)

நாம் ஆண்டவரை நமஸ்காரம் செய்தவாறு செபிப்போம். இவ் இரவில் புபுது மக்களை பரிசுத்த ஆவியானவர் ஸ்பரிசிக்குமாறு, அபிஷேகம் செய்யுமாறு நாம் இக்கணத்தில் செபிப்போம். நமஸ்காரம் செய்வோம்.

❖ புகழ்ச்சி

❖ மெழுகுவர்த்தியை ஏற்றிக் கொள்ளுங்கள்.

அன்பார்ந்தவர்களே, நாம் எமது மெழுகுவர்த்தியை

ஏற்றிக் கொள்வோம். நான் இறைவாக்கின குழுவிற்கும் குருவானவரையும் இம் மேடை மீது இருப்பவர்களுக்கு அவர்களுடைய மெழுகுவத்தியை ஏற்றுமாறு ஒளியை பெற்றுக் கொடுக்குமாறு அழைக்கின்றேன்.

அதேபோல நான் இந் நேரத்தில் கேட்டுகொள்கிறேன் வீடுகளில் குடும்பமாக சிறு குழுக்களாக ஒன்று கூடி இருக்கின்ற மக்கள் உங்களது வீட்டில் தந்தை அல்லது சங்கத்தில் வயது முதிந்தவர் அவ் விளக்கினின்று ஒளியை ஏற்றி உங்களது குடும்பத்தில் உள்ளவர்களுக்கு சங்கத்தில் உள்ளவர்களுக்கு மெழுகுவத்தியை எற்றுவதற்கு சந்தர்ப்பத்தை கொடுக்குமாறு. அத்துடன் நாம் பரிசுத்த ஆவியானவருக்கு வல்லமையான ஒரு பாடல் வழியாக இடமளிப்போம்.

நாங்கள் உங்களை அழைக்கின்றோம் சிறு குழுக்களாக, குடும்பமாக வல்லமையான பரிசுத்த ஆவியானவரின் பொழிவை வேண்டி செபத்திற்கு உள்ளாகியவாறு ஆவியானவருக்கு நமஸ்காரம் செய்தவாறு 50 வருடங்களாக எம்மை அழைத்து வந்த ஆவியானவருக்கு வந்தனையையும் நமஸ்காரத்தையும் செய்தவாறு புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம். இன்று ஆரம்பமாகின்ற புதிய யுகத்திற்கு வல்லமையான திருப்பொழிவை இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்று சாட்சி பகிர்வதற்கு வாழ்க்கை பலியினூடாக, இயேசு கிறிஸ்துநாதருக்காக வாழ்வை பலியாக்குவதற்கு தேவையான வல்லமையை தருமாறும், திருச்சபையை அன்பு செய்கின்ற வாழ்க்கைக்கு உள்ளாகி, என்ன நிகழ்ந்தாலும் திருச்சபையை விட்டு விலகாமல் திருச்சபையினுள் இருந்தவாறு திருச்பை தாயானவரை மறுமலர்ச்சி அடைய செய்யும் பயணத்திற்கு எம்மை அபிே கம் செய்யுமாறு வல்லமையான பரிசுத்த ஆவியானவரின் பொழிவை வேண்டி செபிப்போம். நாம் ஒளியை பகிர்ந்து கொண்டதின் பின்பு பரிசுத்த ஆவியானவரின் பாடலுடன்

செபத்திற்கு உள்ளாகுவோம்.

❖ மெழுகுவர்த்தியை ஏற்றியவாறு செபியுங்கள்.

❖ அக்கினி அக்கினி .....

❖ உங்களது இல்லங்களில் பரிசுத்த ஆவியானவரின் பொழிவை வேண்டி செபத்திற்கு உள்ளாக முடியும்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

**(1) பரிசுத்த திருச்சபை தாயானவருக்காக செபிப்போம்.!**

அப்பா தந்தையே, இறை மக்களை நல்வழி படுத்துவதற்கு அழைப்பு பெற்ற பரிசுத்த திருத்தந்தை உட்பட குருக்கள் துறவிகள் அனைவரையும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நிரப்புமாறும். கிறிஸ்துநாதரின் மீட்பின் பணியை உலகத்தினுள் நிறைவேற்றுவதற்கு தேவையான பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவர்கள் அனைவர் மீதும் பொழியமாறு நாம் உம்மிடம் மன்றாடுகின்றோம்.!

**(2) சுவாமி அப்பாவிற்காக செபிப்போம்.!**

இயேசு கிறிஸ்துநாதரை தமது வாழ்வின் தரிசனமாக் கொண்டு வாழ்கையில் சாட்சி பகர்வதற்கு சுவாமி அப்பா பெற்ற அதிக வரப்பிரசாதங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவரினூடாக மறுமலர்ச்சி அடைந்த மக்களுக்கு உரிமையாகிய வாழ்க்கை தரிசனத்திற்கு, வாழ்வினூடாக சாட்சி பகிர்வதற்கு கிது தன புபுதுவவினுள் தலைமைத்துவம் வகிக்கும் அனைவருக்கும், புபுது மக்களுக்கும் தேவையான பரிசுத்த ஆவியானவரின் பொழிவு இவ் யூபிலி ஆண்டில் கிடைக்குமாறு நாம் உம்மிடம் மன்றாடுகின்றோம்.!

**(3) பொன்விழா யூபிலிக்காக செபிப்போம்.!**

50வருட தூய ஆவியின் பயணத்தில் மறுமலர்ச்சி அடைந்த மக்களை அழைத்து வந்த இறை தந்தையே,

நாம் பெற்ற அநேக வரப்பிரசாதங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். சவால்கள், போராட்டங்கள், புறக்கணிப்பு, ஏளனம், நிந்தை, அவமானம் முன்னிலையில் இயேசு ஆண்டவரை எமது வாழ்வின் ஒரே ஆண்டவராக அனுபவித்தவாறு பயணத்தில் ஈடுபடுவதற்கு நாம் பெற்ற அனைத்து ஆசீர்வாதங்களுக்காக நன்றி நவில்வதுடன் என்றுமே நின்று விடாத தூய ஆவியின் பயணத்தில் ஈடுபடுவதற்கு தேவையான பரிசுத்த ஆவியின் வல்லமையினால் எம்மை வலுவூட்டுமாறு நாம் உம்மிடம் மன்றாடுகின்றோம்.!

**(4) கொரோனா கொள்ளை நோய்க்காக செபிப்போம்.**

அன்புள்ள இறை தந்தையே, கொரோனா எனும் நோய் முழு உலகை மூடிக்கொண்டு இருக்கும் போது, இறை தந்தையின் குரலுக்கு செவிமடுப்பதற்கு, அவர் கூறுவதை விளங்கிக் கொள்வதற்கு முழு அகிலத்திற்கும் தேவையான பரிசுத்த ஆவியானவரின் ஞானத்தை பொழிந்தருளும். அவ்வாறே கொரோனா நோயினால் துன்புறும் நோயாளர்களுக்கு சுகத்தையும் அவர்களை பராமரிப்பவர்களான வைத்தியர்கள், தாதிமார்கள், சுகாதார பகுதியில் உள்ள அனைவருக்கும், பாதுகாப்பு பிரிவில் இருக்கின்ற அனைவருக்காகவும் தேவையான சரீர, மன, ஆன்மீக சுகமும் வல்லமையையும் கிடைக்குமாறும், நோயினால் இறந்தவர்களுடைய ஆன்மாவிற்காகவும் செபிப்போம். இறந்தவர்களினால் துன்புறும் அனைவருடைய மனதிற்கு ஆறுதல் கிடைக்குமாறு நாம் உம்மிடம் மன்றாடுகின்றோம்.!

**(5) பாஸ்கா தாக்குதலினால் துன்புறுகின்ற அனைவருக்காகவும் செபிப்போம்.!**

அப்பா தந்தையே, திருச்சபை தாயானவர் அப்போஸ்தலரின் இரத்தத்தின் வல்லமையினாலேயே

போசிக்கப்பட்டது. தீவிரவாதிகளுக்கு இரையாகி கிறிஸ்தவ மக்கள் இன்று சாட்சி பகிர்கின்றார்கள். பாஸ்கா தாக்குதலினால் வாழ்க்கையை இழந்த அனைவரும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையை போசிப்பதற்கு உயிர் தியாகம் செய்தவர்களாக நாம் கருதுகின்றோம். இன்னும் அதற்காக நியாயம் கிடைக்காதவர்களுக்காகவும், அவர்களுக்காக கண்ணீர் சிந்துகின்ற நண்பர்கள் உறவினர்களுக்காக உம்மிடம் மன்றாடுகின்றோம். அவ்வாறு இவ்வாறான அழிவுகள் நிகழும் வரை பொறுப்பற்ற தன்மையில் செயல்பட்ட அனைவரும் தாம் செய்த தவற்றை உணர்ந்து ஏற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் இவ்வாறான ஒன்று நிகலாமல் இருப்பதற்கு தேவையான பொறுப்பணர்ச்சியையும் ஞானத்தையும் பொழியமாறு நாம் உம்மிடம் மன்றாடுகின்றோம்.!

**(6) நாம் நாட்டிற்காக செபிப்போம்.!**

அன்பார்ந்தவரான இறை தந்தையே, எமது நாட்டை ஆட்சி செய்யும் தலைவர்கள், அரச வல்லமை உடையோர் சுயநலத்திற்கு அடிமையாகி இச்சைக்கு, ஆசைகளுக்கு அடிமையாகி எளிய மக்களுக்கு செய்கின்ற அனைத்து அநீதிகளை நீர் கண்ணோக்கியருளும். துன்புறும் மக்களுக்கு நன்மையை செய்வதற்கு அவர்களை உயர்த்துவதற்கு செய்ய வேண்டியதை சரியான விதத்தில் செய்வதற்கு இயற்கையை பாதுகாத்து நாட்டை அன்பு செய்வதற்கு அவர்கள் அனைவருக்கும் வழிகாட்டியருளுமாறு நாம் உம்மிடம் மன்றாடுகின்றோம்.!

## கிது தன புபுதுவ  தலைப்புப் பாடல் அறிமுகம்

அப்பாவாகிய இறை தந்தை இத்தனை மணித்தியா-லங்களும் உங்களை என்னை மாபெரும் ஆனந்தத்திற்கு உள்ளாக்கினார். புபுது வரலாற்றின் அரைநூற்றாண்டினை களிப்புடன் கழித்த பொன்மயமான இரவில் இறைவனது அன்பிற்குரிய வெளிப்பாடுகளாகிய விண்ணக ரகசியங்களை புபுதுவ மக்களாகிய எம்மோடு பகிர்ந்து கொண்டார்.  முழு அகில மக்களும் தொலைநுட்பம் வழியாக விண்ணக வெளிப்பாடுகளுக்கு நேரலை வழியாக ஒன்றித்திருந்தனர். இப்போ நாம் பொன்மய இரவின் நிகழ்வை நிறைவு செய்ய ஆயத்தமாகின்றோம்.

கிது தன புபுதுவ ஆரம்ப தினம் எதுவெனும் குறிப்பு எம்மிடம் இல்லை அந்நாளை உறுதியாகக் கூறமுடியாது. ஆயினும் கிது தன புபுது முடிவுறும் திகதி தெளிவாகும். இது எமது தலைப்புப் பாடலில் உறுதியாக கூறப்படுகின்றது. அதுவே மாட்சி மகிமை அலங்காரத்தில் கிறிஸ்து அரசர் வரும் வரை ஆம் நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரும் வரையில் கிறிஸ்தவ மறுமலர்ச்சி மக்கள் வாழ்க வளர்கவே. ஆண்டவர் வரும் வரையில்,  அவரது வல்லமை, மகிமைக்கு சாட்சியம் பகர்தல் உறுதியாகும்.  நாம் கிது தன புபுது  தலைப்புப் பாடலுக்கு இப்போது உள்ளாகுவோம்.

- **புபுது  தலைப்புப் பாடலைப் பாடுவோம்.**
- **இப்போது நாம் எமது தேசத்திற்கு எமது  கௌரவத்தை  செலுத்துவோம்.**
- **தேசீய கீதத்தைப் பாடுவோம்.**

# பொன்விழாச் சின்னம்

KITHU DHANA PUBUDUWA

1971-2021

**GOLDEN JUBILEE**

ස්වර්ණ ජයන්තිය

பொன் விழா

கிது தன புபுதுவவை மையமாக்கிக் கொண்டவாறு, ஐம்பதாவது இலக்கம் ஊடாக மேலெழும்புகின்ற புறாவானது, ஐம்பது வருட கிது தன புபுதுவவின் ஆரம்பம் தொட்டே இன்று வரையிலும், ஏன் வருங்காலத்திலும் பவுலடிகளார் உரோமையருக்கு எழுதிய நிருபத்தில் 8:14 வசனத்தின் பரிசுத்த வார்த்தையை அடிப்படையாக்கிக் கொண்ட ஆவியானவர் பயணத்தை நிருபணமாக்குகின்றது. அந்தப் பயணமானது, திருமுழுக்கினதும் உறுதிப்பூசுதலினதும் அழைப்பினை மேலோங்கச் செய்தவாறு, பரிசுத்த திரு அவையை மேலோங்கச் செய்தவாறு நற்செய்தியை வெளிப்பாடாக்குகின்ற தூதுரைப் பயணத்திற்கு அடிகோலியவாறே ஆரம்பமாகியது.

ஐம்பதாவது இலக்கத்தின் சைவரை மையமாக்கிக் கொண்டு, பரிசுத்த வேதாகமும், திருச்சிலுவையும் அடையாளமிடப்பட்டுள்ளது. கிது தன புபுதுவ பரிசுத்த வேதாகமத்தையும், உயிருள்ள பாரம்பரியத்தையும் அடிப்படையாக்கிக் கொண்டு திரு அவையின் வழுவா வரத்திற்கு பிரமாணிக்கமுள்ளதாகப் பயணமாகின்றதென பரிசுத்த வேதாகமம் எமக்குக் குறிப்புணர்த்திக் கூறுகின்றது. திருச்சிலுவையின் அடையாளமானது, சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" என்று சிறு மந்தையின் அழைப்பினை உரிமையாக்கிக் கொண்ட பயணமென்பதை எமக்கு நினைவூட்டுகின்றது.

சிறகுகளை விரித்துக் கொண்டு பறந்து செல்லுகின்ற புறாவின் நான்கு சிறகுகள், ஒளிர்வதை இலக்கம் ஐந்தின் ஊடாகக் காண்பதற்கு முடியுமாகின்றது. அதன் வழியாக கிது தன புபுதுவவிற்கு ஆவியானவர் பரிசாகத் தந்த கெரிஸ்மாவின் நால்வகை மொழிதல்களின் வரங்கள் அடிப்படையாகிய, நபர் குடும்பம் சமூதாயம், பொருளாதார, அரசியல் மாற்றங்கள் வழியாக இறைவாக்கின் சாட்சி பகர்தலுக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். என்பதைத் தூய ஆவியானவர் எமக்கு விழிப்புணர்த்துகின்றார். மஞ்சள் நிறத்திலான பின்னணிக்கும் செந்நிறத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொன்விழாச் சின்னம் ஆவியானவரினால் மற்றியெரிந்த ஆன்மீகத்தினால் ஊட்டம் பெற்ற பொன்விழாவினைக் கொண்டாடுவதற்கான அழைப்பினை விடுக்கின்றது. புதிய

புதுஅச்சகம், 452, தேசிய பெசிலிக்கா மாவத்தை, ராகம.
தொலைபேசி : 011-5288344-5, Fax : 011-2958439
E-mail : press@pubuduwa.org